[illegible]

বর্ষ ১ সংখ্যা ৭

July 1951

JL

R34mm N51
N51.1.7
182313

பகுத்தறிவு

267



JL
R34m N51
N51.1.7
182313

17-7-1951. அணா 3

சிறந்த சிந்தனைச் சுரங்கம்!

★ ரஸ்புடீன் ★

ரஷ்ய சமுதாயத்தையே ஆட்டிப் படைத்த
நாசகாலன் வரலாறு

கருத்துக் குவியல்! தேன் நடை!

"திராவிட நாடு" துணை ஆசிரியர் :

அரங்கண்ணல் தீட்டியது.

விலை ரூ. 1—8—0.

திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.

எங்கும்
எப்போதும்
எல்லோரும்
விரும்பும் பீடி
சுபான் பீடி!

உங்கள் பேனாக்களையும், எழுத்துக்களையும் சிறப்பிப்பது

குயில் இங்க்

அரசாங்கத்திற்கும், லோக்கல் போர்டுகளுக்கும்
சப்ளை செய்பவர்கள்.

சேலம் கெமிக்கல் இண்டஸ்டிரியஸ், சேலம்

வந்து விட்டது! ::
:: வந்துவிட்டது!

தோழர். சி. பி. சிற்றரசு
எழுதிய

சிந்தனைச் சுடர்

இரண்டாம் பதிப்பு.

●

மனித வாழ்க்கையிலே
சிந்தனையின் முக்கி
யத்தை வரலாற்று
முறையிலே
வன்மையோடு
விளக்கும்

அரிய ஆராய்ச்சி நூல்.

விலை அணா 0-5-0

விற்பனையாளர்களுக்குக்
கழிவு 25 %

தென்றல் நூற்பதிப்புக்
கழகம்,
சாகண்டபுரம், சேலம் மாவட்டம்.

பகுத்தறிவு.

ஆசிரியர் :
ப. கண்ணன்.

●

வள்ளுவராண்டு 1982. திங்கள் 7

மலர் 1	கர-ஆடி	இதழ் 7

பொருளடக்கம்.

எல்லாம் அவன் செயலா? ... 2
கு. கட்டிமுத்து
எழுத்துச் சீர்திருத்தம் ... 3
நடப்பும் கருத்தும் ... 5
அநசூயாவைக் கேளுங்கள் ... 7
பாவலர். வேலாயுதசாமி
பணம் சேர்க்கும் பாதை ... 9
(ரிச்சார்டு சாண்டர்ஸ்)
மொழி பெயர்ப்பு:
ர. வரதராசன்
நம்பினவருக்கு (சிறு கதை) ... 17
ப. க. குஞ்சிதம்
பொன்மொழிகள் ... 21
இலக்கிய விமர்சனம் ... 22
பொ. அண்ணாமலை
சிரிக்காதே! ... 24
காசி யாத்திரை (சிறு கதை) ... 25
எஸ். எஸ். தென்னரசு
ராய்ட்டர்—செய்தி நிறுவனம் ... 28
ஆப்ரஃகாம் லிங்கன் ... 29
சமுதாய விடுதலை (இங்கர்சால்) 33
மொழி பெயர்ப்பு:
இரா. நெடுஞ்செழியன் M.A.,
விதவை ... 35
கருத்துரை ... 36

★

எல்லாம் அவன் செயலா?

[கு. கட்டிமுத்து]

★

182313

(1) எல்லாமவன் செயல் என்றெண்ணி ஏமாந்த
தெத்தனை கோடி அய்யோ!
எரிந்துபோனுன் நந்தன், மறைந்துபோனுன் வள்ளல்,
ஈடழிந்தான் மாபலி.
வல்லாளன் என்பவன் பெண்ணிறை இழந்தனன்,
வாழ்விழந்தனர் கோடிபேர்!
வங்கத்திரை கொண்ட துங்கத்தமிழ் நாடு
வாழ்விழந்தது கடவுளால்!
அள்ளா திருமருணை வள்ளல் காப்பானென்று
அழிந்தனன் தஞ்சை அரசன்,
ஆமோ இதைச் சொல்லப்போமோ அளிச்செல்வ
சோமநாதக் கோவிலில்,
பல்லாயிரம் கொண்ட மக்களை மாமூது
பந்தாடினன் கண்டிடீர்.
பாரேனச் சிரிக்கும் பகுத்தறி விதற்கொரு
பதில்சொல்ல நாவில்லையே!

(2) அண்டரண்டங்களை ஆட்டிப் படைத்திடும்
அவனன்றி அணுவும் அசையா,
ஆகிலஞ்சாழலே பஞ்சாப் படுகொலை
ஆண்டவன் விளையாடலோ?
கண்டத்திலெங்குமே கண்டிராப் பஞ்சப்பேய்
வங்கத்தினில் வந்துமே
கலங்கித் துடித்துயிர் மடிந்தகால் கோடியும்
காரணன் சோதனையதோ?
மண்டல மலண்டிடக்கண்டு நவகாளியில்
மலர்கண்கள் குருதிவழிய,
மைந்தரோடுமாதரும் மணளரும் கொலைபட
மாகாளி திருவுள்ளமோ?
கண்டு கண்கொண்டுலக தந்தையைக் கொல
கடவுளாணை தந்ததோ?
காரணம் கேட்டுச்சிரிக்கும் பகுத்தறிவைக்
கண்டிக்க வகையில்லையே!

எழுத்துச் சீர்திருத்தம்.

தமிழ்; மிகப் பழமையானதும், இனிமையானதுமான மொழி என்பதை, இன்று எவரும் மறுப்பதில்லை. தமிழ் வடமொழியினின்றும் பிறந்தது என்று சில "கதம்பங்கள்" கதைத்துக்கொண்டிருந்த காலம் போய்விட்டது; என்றுலும் தமிழ் வளர்ச்சிக்கு நாம் இன்னும் செய்யவேண்டுவன பலவுண்டு.

பிறமொழியினர் தமிழைக் கற்பதில் தடையாகநிற்பது, தமிழின் எழுத்துப் பெருக்கம் தமிழ் எழுத்துக்களைத் திருத்தியமைத்துச் சுருக்கிவிட்டால், கற்பதற்கும் எளிது, அச்சிடுதற்கும் வசதி என்று இருபதாண்டுகட்கு முன்பு பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் துவக்கினர் இப்பிரச்சினையை. பேச்சளவில் நில்லாமல், தமது பத்திரிகைகளையும், புத்தகங்களையும், மாற்றியமைத்த எழுத்துக்களாலேயே பிரசுரித்தார். மாறுதல் வேண்டாத மதமதியினர் உள்ளம் புழுங்கினர். பழமை விரும்பிகள் பரிகசித்தனர். "கன்னுதற் கடவுள் தந்த பசுந்தமிழைப் பாழாக்குகின்றனர்" என்று பதைத்தனர் தமிழ்ப் புலவர்கள்!

அறிவுத்தன்மை வென்றது. இன்று பெரியார் சொன்ன முறையும், மற்ற அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவும் அரசினரால் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டன. தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்குழுவினர் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு, 133 தமிழ் எழுத்துக்கள் 92 எழுத்துக்களாகக் குறைக்கப்பட்டு, இனி அரசாங்கத்தின் வெளியீடுகளும், பாட புத்தகங்களும் புதிய முறைப்படிதான் பிரசுரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர்.

(1) உயிர் எழுத்துக்கள் அப்படியே இருக்கும். "ஈ" மட்டும், இனி "இ" என்று எழுதப்படும்.

(2) உயிர்-மெய் எழுத்துக்களில், உகாரம், ஊகாரம் தவிர, மற்ற குறில் நெடில்களுக்கு ஒரே விதமான எழுத்தமைப்பு பொதுவாகப் பின்பற்றப்படும். அந்த உயிர்க் குறியானது, மெய்யெழுத்துடன் இணைக்கப்படாமல், தனியாக எடுத்தெழுதப்படும். அதாவது: உயிர்-மெய்யெழுத்துக்களான ஐ, ஔ,

லை, ளை, னா, ணா, றா. ஆகிய எழுத்துக்கள், இனி லை, ளை, னை, ணை, னா, ணா, றா, என்று எழுதப்படும். இவ்வகையில் 7 எழுத்துக்கள் குறைகின்றன.

"இ" காரம் "ஈ" காரம் ஆகிய இரண்டு உயிர்க் குறிகளைத் தனியாக, மெய் யெழுத்துக்களின்மேல் இடுவது, அதாவது "கி" "கீ" என்பன இப்பொழுது தனி எழுத்துக்கள். இனி "க" வின்மேல் "இ" கரத்திற்கும், "ஈ" காரத்திற்கும் தனிக் குறிகள் ஏற்றப்பட்டு எழுதப்படும். இவ்வகையில் 18+18=36. எழுத்துக்கள் குறைகின்றன. ஆக மொத்தம் 36+7=43. எழுத்துக்களை 133-ல் கழித்தால் 90. இவற்றோடு, தனி "இ" கரக்குறி, "ஈ" காரக்குறி 2-ம் சேர்த்தால் மொத்தம் தமிழுக்கு 92 எழுத்துக்களாகின்றன.

தமிழ் எழுத்துக்களைத் திருத்திச் சுருக்கி, இன்னும் எளிதாக்கவும் வழிகள் சொல்லப்படுகின்றன. அவற்றைச் செயற்படுத்த எதிர்காலம் வாய்ப்பளிக்குமென்று நம்புகிறோம். எந்தத் துறையிலும் பழமையை அப்படியே பாதுகாப்பதென்பது எப்பொழுதும் நடவாதவொன்று.

எலும்பைப் பெண்ணுருவாக்கியதும், மறைக்கதவைத் திறந்ததுமான தெய்வத் தமிழுக்குத் திருத்தம் வேண்டாம் என்று மறுப்பவர்கள், பழங்காலச் சாசனங்களிலே, பட்டயங்களிலே பொறிக்கப்பட்டுள்ள தமிழோடு, இன்றைய தமிழை ஒப்பிட்டுப் பார்த்தார்களானல், மாறுதலில் சக்தியை நன்கு உணருவார்கள். நமஸ்காரம், ஜில்லா, சந்தோஷம், ஆபீஸ் போன்ற சொற்களை, தமிழின் பகைவரும் கூட; வணக்கம், மாவட்டம், மகிழ்ச்சி, அலுவலகம் என்று திருத்தமாக எழுதும் நிலை வந்திருக்கிறது. காலம் மாறுகின்றது. பகுத்தறிவு வாதிகளின்—சீர்திருத்தக்காரர்களின்—மொழிப்போர் நடத்தியவர்களின்—தளராத உழைப்பு வீண் போகவில்லை. இனியும் போகாது. அறிவின் அடிப்படையில் எழும் எந்தப் பிரச்சினையும், இறுதியில் வெற்றியடைந்தே தீரும் என்பது உறுதி.

இன்றைய எழுத்துச் சீர்திருத்தம், ஒரு புரட்சிகரமான மாறுதல் என்று சொல்லமுடியாவிட்டாலும், இந்த அளவுக்கேனும் வந்ததை, மனமுவந்து வரவேற்கின்றோம். தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவினரையும், அரசினரையும் பாராட்டுகின்றோம். ○○○

நடப்பும் கருத்தும்

உண்ணாவிரத மகத்துவம்!

காந்தியார் உண்ணாவிரதம் இருந்தபொழுது, அதற்கு ஒரு தெய்வீகமதிப்புக் கற்பித்தார். "நாற்பது நாட்களாக உணவில்லை. ஆண்டவன் அருள் இல்லாவிடில் பிழைத்திருப்பாரா?" என்று அதற்கு மகத்துவம் கற்பித்தனர், அவரை மகாத்மாவாக்கினவர்கள். அது அரசியலுக்குப் பயன்பட்டது அந்த நாளிலே.

இன்று உண்ணாவிரதம், மனித வல்லமையை எடை போடும் ஒரு போட்டி விளையாட்டாகிவிட்டது.

இவ்வாண்டு ஜூன் மாதத்தில், ஃபிரஞ்சுக்காரர் ஒருவர், 60-நாள் உண்ணாவிரதமிருந்து காட்டினர். ஜூலையில் இத்தாலியைச் சேர்ந்த டெல்போ என்பவர் 61-நாள் கண்ணாடிப் பெட்டிக்குள் உண்ணாவிரதமிருந்து காட்டியுள்ளார். உலக உண்ணாவிரதிகளை டெல்போ மிஞ்சிவிட்டார் என்று கூறுகிறது ரோம் செய்தி.

எங்கு எப்படியிருந்தாலும், தொழிலின்றி, வருவாயின்றி, உணவுப் பொருளின்றி இயற்கையாகவே உண்ணாவிரதமிருக்கும் நம் நாட்டு மக்களை மிஞ்சுவோர், எந்நாட்டிலும் இருக்கமுடியாதென்பது மட்டும் நிச்சயம்!

பிறப்புரிமை விசித்திரம்!

இந்தியக் குடியரசுச்சட்டம் திருத்தப்பட்டதன் விளைவாக, பத்திரிகையின் எழுத்துரிமை பறிக்கப்பட்டுவிட்டது. இதனைக் கண்டித்து, அகில இந்திய பத்திரிகையாளர் சங்க மாநாட்டில், ஜூலை 12-ம் நாளில் பத்திரிகைகள் ஒரு வெளியீட்டை நிறுத்தி, அதிருப்தியைக் காட்டவேண்டுமென்று முடிவு செய்தனர்.

அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின் மூலம் அது பூரணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்.

இப்படியாக வீராப்பு விளம்பரம், தலையங்கத்தின்மேல் பொறித்துக்கொண்டன தேசியத்தாள்கள். 12-ம் நாள் பிரசுரிப்பதை மட்டும் நிறுத்தவில்லை. ஒத்திவைத்துவிட்டனராம். பிறப்புரிமையைப் பாதுகாக்கும் அழகைப் பாருங்கள்!

எழுத்துரிமை—அபிப்பிராய சுதந்தரம்—இந்நாட்டுக்குத் தேவை என்ற எண்ணம் இவர்களுக்கு உண்மையில் இருக்குமானால், சமுதாய இழிவுகளைப் போக்கி, அறிவு வளர்ச்சிக்கு அடிகோலும் "இரணியன்" "போர்வாள்" "தூக்குமேடை" போன்ற நாடகங்கள் தடுக்கப்பட்டதற்கும், பத்திரிகைகள், புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டதற்கும் பதைத்திருக்கவேண்டாமா? கண்டித்திருக்கவேண்டாமா?

எழுத்துரிமை, பேச்சுரிமைக்கென்று, பல்லாயிரக் கணக்கான மக்களைக்கொண்ட மாநாடுகள் நாட்டிலே நடைபெறுவது தெரிந்தும், தெரியாதுபோல் பாசாங்கு செய்யும் இந்த யோக்கியர்கள் கோரும் பேச்சுரிமைக்கும், போராட்டத்திற்கும் என்ன பொருள் இருக்கமுடியும்? பிறப்புரிமையே! உன் விசித்திரமே விசித்திரம்!

திருக்குறளார் வாழ்க!

சென்ற 24-6-1951, குடந்தையில், "குறள்மலர்" ஆசிரியர் தோழர். வீ. முனிசாமி அவர்கட்கு, திருக்குறள் இசைவிழா நடாத்தி, அறிஞர்கள் பாராட்டுரை நல்கி, "திருக்குறளார்" என்ற பட்டம் அளித்துள்ளனர். மகிழ்கின்றோம்.

தமிழ்ப் புலவர் இல்லங்களிலே பதுங்கிக்கிடந்த "திருக்குறள்" என்ற வாழ்வுநெறிக்கருவூலத்தை வெளியே கொண்டுவந்து, பகுத்தறிவுக்கு ஏற்ற முறையில் புத்துரை புனைந்து, மக்கள் மன்றத்திலே வைத்து, பாமர மக்களிடையே குறளறிவைப் பரப்பிய தோழர். முனிசாமி அவர்கள், பட்டமளிக்கவும், பாராட்டப்படவும் வேண்டிய நல்லறிஞரே யாவார். வாழ்த்துகின்றோம்! பட்டமளிப்பு அவர் பணியை ஊக்குமாக!

சொல்லும் செயலும்.

சொல் வேறு, செயல் வேறு என்பதற்கு உதாரணமாக விளங்குவது; காங்கரஸ் தலைவர்களின் மதச்சார்பற்ற ஆட்சிப் பிரசாரம். முன்ஷிக்களும், ராஜேந்திர பாபுக்களும், தாண்டன்களும், ராஜாஜிக்களும் எந்த அளவுக்கு மதவெறி கொண்டவர்கள் என்பதை, சோமநாதர் ஆலயத்திருப்பணி, சோதிடராசிப் பலன் கூறுதல், அக்கினிபுராணம் படித்து மர நடுவிழா நடத்துதல் போன்ற செயல்கள் மெய்ப்பிப்பனவாகும்.

இவற்றையெல்லாம்கண்டு, வயிறு எரிந்துதானோ என்னவோ, ஜூலை 13-ல் பெங்களூரில் நடந்த அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் பண்டித ஜவகர்லால் கூறியுள்ளார்:

"இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதில் காங்கரஸ்காரர்களுக்குத் துளிகூடச் சந்தேகம் இருக்கக் கூடாது. இந்தியா மதச்சார்பற்ற நாடாகவே இருக்கவேண்டும். அதற்காகக் கடைசிவரைப் பாடுபடுவோம். இதில் இரண்டுவிதக் கருத்துகளுக்கோ, அல்லது தயக்கத்திற்கோ இடமிருக்கக்கூடாது. இதுபற்றித் தவறாகவும், முட்டாள்தனமாகவும் எவ்வளவோ பேசப்படுகின்றன. அதை அடியோடு ஒழித்துக்கட்டுவோம். சொல்வதை ஒருவிதமாகச் சொல்லிவிட்டு, செய்வதை ஒருவிதமாகச் செய்வது சரிதானா என்று நான் கேட்கிறேன்."

இவர் என்ன கேட்டாலும், இடித்துரைத்தாலும் பலன் என்னவோ நடைமுறையில் இருப்பதுதான்! அதில் சந்தேகமே வேண்டாம்!

வருந்துகிறோம்.

சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்ப சூறாவளிபோல் பணியாற்றியவரும், சிறந்த பேச்சாளருமாகிய பூவாளூர், தோழர். அ. பொன்னம்பலனார் அவர்களின் அன்னை திருமதி. பொ. அ. நாகம்மையார் 27-6-51 மாலை 5-மணிக்கு இயற்கை முடிவு எய்தினமை கேட்டு வருந்துகிறோம். இயற்கையின் தன்மையறிந்த அன்னாருக்கும், அவர்கள் குடும்பத்தினர்க்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

அநசூயாவைக் கேளுங்கள்.

[பாவலர். வேலாயுதசாமி]

●

(1) உலகினுக்கே காரணமாம் கடவுளாவார்
உண்டாக்கிக் காத்தழிக்கும் சக்தி வாய்ந்தோர்,
அலகிலரு ளுருவான மூர்த்தி யென்பார்,
அயன்மாயன் அரனென்ற மூன்று பேர்கள்,
பலதினுசுக் கடவுளுக்கும் தலைமையானோர்,
பண்பென்னும் மனிதவொழுக் கத்தி னின்றும்
விலகியதீச் செயல்புரிந்து மான மின்றி
விளையாடி யுள்ளகதை கேண்மின்! கேண்மின்!

(2) மனைவியரின் பொறுமைமிகு சிந்தை தன்னை
மகிழ்வித்துக் கொஞ்சுதலாம் விருந்தை யுண்ணப்
புனிதவதி யானஒரு பெண்ணின் கற்பைப்
போக்குமனத் துணிவுடனே, கயமை யோர்கள்
நினைவினிலும் தோன்றாத இழிந்த எண்ணம்
நெஞ்சிலே கொண்டதற்குத் திட்டம் போட்டுத்
தினையளவு நேர்மையதும் இல்லா ராகிச்
சென்றனராம் கூட்டாகத் தொழில் நடத்த!

(3) கபடவடி வெடுத்தனராம் ஆண்டி போலக்
காரிகையைப் பிச்சையிடக் கேட்டிட் டாராம்.
உபசரித்தே உணவருந்த வுரைத்திட் டாளாம்,
ஒப்பினராம். நிருவாண மாக நின்றே
சபலமின்றிப் பரிமாறச் சொல்லிட்டாராம்
சரிதானோ? என்றாளாம், வாதிட் டாராம்.
அபரமறிந் தவள்கற்பின் சக்தி தன்னை
விளக்கினளாம் மூவரையும் குழந்தை யாக்கி.

[பின்பக்கம் பார்க்க]

(4) கற்புடைய ஒருத்தியின்மேல் பொறாமை கொண்டு,
கணவரிடம் சொல்வதெனில் அவர்கள் தன்மை
சொற்பஅறி வுடையோரும் புரிந்துகொள்வார்.
சொன்னதற்குத் தலையாட்டிச் சம்மதித்து
விற்பனமும், பெருமிதமும், பண்பு மின்றி
வெறிகொண்ட, காமமதால் வெட்கங் கெட்ட
அற்பர்களைக் கடவுளென வணங்கலாமோ?
அநசூயை தனைக்கேட்டுத் தெரிந்துகொள்வீர்.

(5) இகமதிலே ஒரு பெண்ணின் கற்பைப் போலே
இல்லாத காரணத்தால் ஏக்கங் கொண்டு,
மிகவுமன நொந்தாரென் றாலப் பெண்கள்
விபசாரிப் பட்டியலில் வருவோ ராவார்.
அகிலவுல கத்தினையே ஆட்டு விக்கும்
அம்மூன்று மூர்த்திகளும் பிச்சை கேட்டல்
தகுதியுள செயலாமோ? பார்ப்ப னர்கள்
தம்தொழிலுக் குதாரணமாய்க் கூறினாரோ.

(6) சற்றுமனங் கூசாமற் குலகன் மங்கை
தன்னைநிரு வாணமுட னிறுத்தி, அங்க
மூற்றிலுமே பார்ப்பதற்கு விருப்பங் கொண்டு
முயன்றிட்ட மூர்த்திகளின் சந்நிதிக்குப்
பெற்றதமிழ்ப் பண்பொழுக்கம் கமழ்ந்திடும் நம்
பெண்ணினங்கள் போவதுதான் எத்தன்
மைத்தோ!
கற்றறிந்த பக்தர்களே! கடவுள் தன்னைக்
காப்பாற்ற நினைப்பவரே! ஆய்ந்து பார்ப்பீர்.

பணம் சேர்க்கும் பாதை.

[ரிச்சர்டு சாண்டர்ஸ்]

★

மொழி பெயர்ப்பு: ந. வரதராசன்.

நான் சொல்லப்போகும் சம்பவத்திலும் நான் எப்படி திருப்தியடைந்திருப்பேன் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கொஞ்ச நாளைக்கு முன்னால், கடைவீதியில் கூடியிருந்த ஒரு பெரிய கும்பலுக்கு முன்னால் என் குதிரையை நிறுத்தினேன். வியாபார நேரம் இன்னும் தொடங்காததினால், காலம் எப்படிக் கெட்டுக்கிடக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் பெரிய மனிதராயிருந்த ஒரு நரைத்த கிழவரைப் பார்த்து ''ஆப்ரஹாம் ஐயா! நீங்கள் இந்தக் காலநிலைமையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இப்பொழுதிருக்கும் கடுமையான வரிப்பளுவினால் நாடு நாசமாகிவிடாதா? இந்த வரிகளைச் செலுத்த நமக்குச் சக்தியிருக்கிறதா? நீங்கள் எங்களுக்கு என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார். ஆப்ரஹாம் எழுந்துநின்றார்.

''நீங்கள் என் யோசனையைக் கேட்டால், நான் உங்களுக்குச்சுருக்கமாகக் கூறுகிறேன். ஏனெனில் புத்திசாலிகளுக்கு ஒரு வார்த்தை போதுமானது. ஏழை ரிச்சர்டு சொல்வதுபோல்; அநேக வார்த்தைகளால் கூடையை நிரப்பிவிட முடியாது.'' என்று பதிலளித்தார். எல்லோரும் அவரைப் பேசும்படிக் கூறி, சூழ்ந்து நின்றுகொண்டார்கள். அவர் பேச ஆரம்பித்தார்.

''தோழர்களே! உண்மையில் வரிகள் மிகக் கடுமையாகத்தான் இருக்கின்றன. நாம் சர்க்காரால் விதிக்கப்பட்ட வரிகளை மட்டுமே கட்டவேண்டியதாயிருந்தால், நாம் அவைகளைச் சுலபமாகச் செலுத்திவிட முடியும். ஆனால் நமக்கு மேலும் அநேக வரிகள் இருக்கின்றன. நம்முள் சிலருக்கு அவை இன்னும் அதிகத் தீமை விளைவிக்கக்கூடியன. நம் சோம்பேறித்தனத்தினால், இதைப்போல் இன்னும் இருமடங்கும், நம்முடைய அகங்காரத்தால் மூன்று மடங்கும், முட்டாள்தனத்தினால் நான்கு மடங்கும் வரிச்சுமைக்கு ஆளாகிறோம். இந்த வரிச்சுமையை சுலபமாக்கவோ, குறைக்கவோ, அதிகாரிகளால் முடியாது. எப்படியும் நல்ல புத்திமதிக்கு நாம் செவிசாய்க்கலாம். நல்ல பலன் ஏற்படக்கூடும்.

மக்களுடைய நேரத்தில் பத்தில் ஒரு பாகத்தைச் சர்க்கார் சேவைக்குச் செலவிடவேண்டும் என்று ஒரு சர்க்கார் வரி விதிக்குமேயானால், அதை ஒரு கொடுங்கோல் சர்க்கார்

என்று கூறத்தயங்கோம். ஆனால் ஒரு வேலையும் செய்யாமலோ, ஒரு பயனுமில்லாத வேடிக்கை விநோதங்களில் பொழுது போக்கியோ, செலவிடும் காலத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும் பொழுது, சோம்பேறித்தனம் நம்மில் அநேகருக்கு இதைவிட அதிக வரி போடுகிறது. வியாதியை வரவழைத்து வாழ்நாளைக் குறைப்பது சோம்பேறித்தனம். உழைத்துத் தேய்வதைவிட, துருப்பைப்போல், சோம்பேறித்தனம் சீக்கிரம் மனிதனைத் தின்றுவிடும். உபயோகத்திலிருக்கும் சாவிதான் எப்பொழுதும் பிரகாசமாயிருக்கும். வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தைக் கணநேரமும் வீணாக்கக்கூடாது. காலத்தால் செய்யப்பட்டதுதான் வாழ்க்கை. சவக்குழியில் போதுமான தூக்கம் தூங்கலாம், தூங்கும் நரி, கோழி பிடிக்காது என்பவைகளை மறந்துவிட்டு, தேவைக்குமேல் எவ்வளவு நேரம் அதிகமாய்த் தூங்குகிறோம்!

எல்லாவற்றையும்விட காலம் மிக மதிப்புவாய்ந்தது என்றேற்பட்டுவிட்டால், காலத்தை வீணாகச் செலவழிப்பது ஊதாரித்தனத்திலும் ஊதாரித்தனமாகும்! கடந்த காலம் திரும்பக் கிடைக்காது. இதற்கு இவ்வளவு நேரம் போதும் என்று நாம் கருதுவது, எப்பொழுதும் பற்றாக்குறையாகவே போய்விடுகிறது என்பது நமக்கு நடைமுறையில் தெரிகிறது. ஆகவே நாம் எழுவோம், பணியாற்றுவோம்; பயனுள்ள வேலையில் ஈடுபடுவோம். கவனத்தோடு செய்வதால் குழப்பத்தைக் குறைத்துக்கொண்டு அதிகமான செயல் புரிவோம்.

காரியங்களைக் கடினமாக்குவது சோம்பேறித்தனம். அவற்றைச் சுலபமாக்குவது உழைப்பு. சோம்பேறித்தனம் மெதுவாக ஊர்ந்து செல்லும்போது, வறுமை அதை வழியிலேயே பிடித்துவிடுகிறது. வேலையை நீங்கள் உங்கள் விருப்பம்போல் நடத்தவேண்டும். அது உங்களை ஆட்டிவைக்கக்கூடாது. நேரத்தில் படுத்து, நேரத்தில் எழுவது, ஒரு மனிதனை ஆரோக்கியமுள்ளவனாகவும், பணக்காரனாகவும், புத்திசாலியாகவும் ஆக்குகிறது.

ஆகவே நல்ல காலத்துக்காக நாம் விரும்புவதிலும், எண்ணுவதிலும் என்ன இருக்கிறது? நாம் உறுதிகொண்டால் நாமே இக்காலத்தை நல்லதாகச் செய்யலாம். உழைப்புள்ளவரை, எதிர்காலத்தை எண்ணிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. அதுவுமல்லாமல், நல்ல காலம் வருமென்று நம்பிக்கையிலேயே வாழ்பவன், பட்டினி கிடந்துதான் சாகவேண்டும். பாடில்லையென்றால் பலனுமில்லை. கழனிகளில்லையென்றால் கைகளிருக்கின்றன. வியாபாரம் உள்ளவனுக்குச் சொத்திருக்கிறது. தொழிலுள்ளவனுக்கு கௌரவமுள்ள உத்தியோகமிருக்கிறது. வியாபாரத்தை நன்றாக நடத்தவேண்டும். தொழிலைக் கவனித்துச் செய்யவேண்டும். இல்லையேல் சொத்தோ, தொழிலோ, நம் வரிகளைக்கட்ட உதவி செய்யாது. உழைப்பாளிகள் ஒரு நாளும் பட்டினி கிடக்கவேண்டியதில்லை. ஏனெனில், உழைப்பாளியின் வீட்டினுள்ளே பசி எட்டிப் பார்க்கலாம், ஆனால் உள்ளே நுழையத் தைரியம் கிடையாது. அமீனாவோ ஆட்சியாளரோ உள்ளே நுழையமுடியாது. ஏனெனில் கடுமையான உழைப்பு கடன்களைக் கட்டிவிடும்! கலக்கம் அவற்றை அதிகரிக்கும்.

உங்களுக்குப் புதையல் தேவையில்லை, பணக்கார உறவினர் உங்களுக்குச் சொத்தை எழுதிவைக்க வேண்டியதில்லை, அதிர்ஷ்டத்தின் தாய் உங்கள் ஊக்கம்! ஆகவே சோம்பேறிகள் தூங்கட்டும், நீங்கள் ஆழமாய் உழுங்கள். நீங்கள் வைத்துக்கொள்ளவும், விற்கவும் உங்களுக்குத் தானியம் கிட்டும். இன்று என்று சொல்லப்படும் பொழுது வேலை செய்யுங்கள். நாளைக்கு என்ன இடைஞ்சல்கள் ஏற்படுமென்று நம்மால் சொல்லமுடியாது. ஒரு ‘இன்றைக்கு’ இரண்டு ‘நாளைக்கு’ச் சமானம். அதுவுமல்லாமல் நாளைக்குச் செய்யவேண்டியதிருந்தால், அதை இன்றைக்கே செய்யுங்கள். நீங்கள் ஒரு வேலையாளாக இருந்தால், உங்கள் எசமான் நீங்கள் வேலை செய்யாமலிருப்பதைப் பார்த்தால் வெட்கப்படமாட்டீர்களா? நீங்களே உங்களுக்கு எசமானாயிருந்தால், நீங்கள் சும்மா இருப்பதற்கு வெட்கப்படுங்கள். உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்துக்காகவும், உங்கள் தேசத்துக்காகவும் எவ்வளவோ செய்யவேண்டிய காரியங்களிருக்கின்றன. எனவே நீங்கள் விடியற்காலையிலேயே எழுந்துவிடவேண்டும். விடிந்த பிறகு, சூரியன் உங்களைப் பார்த்து, கீழ்நோக்கி; மானமில்லாதவன் இங்கே தூங்குகிறான் என்று சொல்லக்கூடாது. உங்கள் தொழிற் கருவிகளை தாராளமாய்க் கையாளுங்கள். கால்களுக்கு உறையிட்டபூனை, எலி பிடிக்காதென்பதை எண்ணுங்கள். எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறதென்பது உண்மைதான். ஒருவேளை உங்கள் கைகள் பலவீனமாயிருக்கலாம், ஆனால் திடமனதோடு வேலை செய்யுங்கள். நல்ல பலன்களை நீங்கள் பார்க்கலாம். இடைவிடாத ஓட்டத்தால் கல்லுந் தேயும். தளராத ஊக்கம், பொறுமை, இவற்றால் எலியும் கம்பியைத் துண்டாக்கும். சிறு வெட்டுக்கள் பெரு மரத்தையும் வீழ்த்தும் என்று ஏழை ரிச்சார்டு சொல்லுகிறார்.

ஒரு மனிதனுக்குக் கொஞ்சங்கூட ஓய்வு வேண்டாமா என்று உங்களில் சிலர் பேசிக்கொள்வது, என் காதுகளுக்குக் கேட்கிறதென்று நினைக்கிறேன். தோழனே! நான் சொல்லுகிறேன்: ஓய்வு உனக்கு அவசியமென்றால், உன்னுடைய காலத்தை நல்ல பணியில் செலவிடு.

மதத்தில் மாற்றம்.

மதங்கள் அனைத்தும் மாறி வருகின்றன. அடிக்கடி திருத்தப்படுகின்றன. மதவாதிகளின அறிவு வளர்ச்சி, தேர்ச்சி, முன்னேற்றம் ஆகியவைகளுக்கேற்ப மதம் மாறுதல் அடைகின்றது. எனவே மதம் மக்களை நாகரிகப்படுத்துகிறது என்பது பொய்யாதல் காண்க. தமது நாகரிகத்திற்கும், நாட்டிற்கும், காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப, மக்களே மதங்களைச் சீர்திருத்துகின்றனர்— புதுப்பிக்கின்றனர்.

—சார்லஸ் பிராட்லா.

ஒரு நிமிடத்தைப்பற்றி உனக்கு நிச்சயமில்லாதபொழுது, நீ ஒரு மணி நேரத்தை வீணாக்காதே! ஓய்வு என்பது உபயோகமுள்ள காரியம் ஏதாவது செய்யும் நேரமாகும். கவனமுள்ள மனிதனுக்கு இந்த ஓய்வு கிடைக்கும். சோம்பேறிகளுக்குக் கிடைக்காது. ஆகவே ஓய்வுள்ள வாழ்க்கை, சோம்பேறி வாழ்க்கை என்பவை இரண்டு தனித்தனி விஷயங்கள். உழைப்பைவிட, சோம்பேறித்தனம் உங்களுக்கு வாழ்க்கையில் வசதியளிக்குமென்று நினைக்கிறீர்களா? கிடையவே கிடையாது. சும்மாயிருப்பதிலே தொந்தரவுகள் தோன்றும். அவசியமில்லாத சுக வாழ்விலே, ஆபத்தான துன்பங்களேற்படும். தொழிலில்லாமல், வாய்ச்சாலகத்திலே பிழைக்கும் அநேகர், சரக்கில்லாத காரணத்தால் பிறகு வீழ்ந்துவிடுகிறார்கள். கைத்தொழில் கௌரவத்தையும், சுகத்தையும், செல்வத்தையும் அளிக்கும். வேடிக்கை முதலான இன்பங்களை விரட்டியடியுங்கள். அவைகள் உங்களைத் துரத்திக்கொண்டோடி வரும்!

நாம் தொழில் செய்வதோடுமட்டுமல்லாமல், அதில் நிலைத்து இடைவிடாமல், சிரத்தையோடு ஈடுபட வேண்டும். அதோடு மற்றவர்களை அதிகமாக நம்பிவிடாமல், நமது கண்களாலேயே கண்காணித்துவர வேண்டும்.

நிலைத்திருப்பவை செழித்து வருவது போல, பிடுங்கிப்பிடுங்கி நட்ட மரமும், பெயர்ந்து, பெயர்ந்து சென்ற குடும்ப[illegible]றைந்துவருவதை நான் கண்ட

என்கிறார் ஏழை ரிச்சார்டு. கடையை வை, கடை உன்னை வைத்திருக்கும். உன் வேலை ஆகவேண்டுமென்றால் நீயே போ. முடியாவிட்டால் ஆளனுப்பு என்கிறார் ரிச்சார்டு.

இன்னும், நீ மேழிபிடித்து விருத்தியாகவேண்டுமென்றால், நீயே பிடிக்க வேண்டும், அல்லது உழவேண்டும். இன்னும், எசமானனின் கண்கள் அவன் கைகளைவிட அதிக வேலை செய்யும். இன்னும்; தெரியாததினால் ஏற்படும் நஷ்டத்தைவிட, அஜாக்கிரதையால் அதிக நஷ்டம் ஏற்படும். இன்னும், வேலையாட்களைக் கண்காணிக்காமல்விடுவது, உங்கள் பணப் பையை அவர்களுக்குத் திறந்துவிடுவதற்கொப்பாகும் என்று சொல்கிறார். ஆகவே மற்றவர்கள் பார்வையில் தங்கள் வேலையை அதிகம் நம்பிவிடுவது, பலபேர் பாழாவதற்குக் காரணமாகும். நாட்குறிப்பு சொல்வதுபோல, இந்த உலக விஷயங்களிலே நம்பிக்கையால் அல்ல, நம்பிக்கையில்லாததனாலேயே மனிதர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். ஒரு மனிதனின் சொந்த சிரத்தையே இலாபகரமானது. ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல்; ஞன்றிப் படிப்பவர்களுக்குக் கல்வி, தைரியசாலிகளுக்கு அதிகாரம், நீதிமான்களுக்கு மேலுலகம், பத்திரக்காரர்களுக்குப் பணம். மற்றபடியும் அவர் சொல்லுகிறார்; சிறிய காரியங்களில்கூட ஜாக்கிரதையும் ஞாபகமும் வேண்டும். ஏனெனில் சில சமயங்களில் கொஞ்சம் ஏமாந்தாற்போலிருந்தாலும், பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும். ஆணியில்லாமல் லாடம் தொலைந்தது லாடமில்லாமல் குதிரை தொலைந்தது. குதிரையில்லாமல் குதிரைக்காரன் துரத்திப் பிடிக்கப்பட்டு எதிரியால் மரணமடைந்தான். எல்லாம் ஒரு லாடஆணிக்காக கவலையெடுத்துக்கொள்ளாத காரணத்தால்.

என் அன்புக்குரிய தோழர்களே! உழைப்பு, அதில் செலுத்தவேண்டிய கவனம் இவைபற்றி இது போதும். இவற்றோடு நமது உழைப்பு இன்னும் நிச்சயமாக வெற்றி பெறவேண்டுமென்றால், சிக்கனத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் தான் சம்பாதிப்பதை மீத்துவைக்கத் தெரியாவிட்டால், தன் வாழ்நாள் பூராவும் சாணை தீட்டுபவனாகத்தானிருக்க வேண்டும். சாகும்பொழுது ஒரு பைசாவிற்குப் பிரயோசனமற்றவனாகத்தான் சாகவேண்டும். ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல:

நீ பணக்காரனாக இருக்கவேண்டுமென்றால், உனக்குச் சம்பாதிக்கவும் தெரிய வேண்டும், சேர்த்துவைக்கவும் தெரிய வேண்டும்.

ஆகவே அதிகச் செலவாகும் ஆடம்பரங்களிலிருந்து விடுபடுங்கள். அப்பொழுதுதான் கஷ்டகாலம் வந்துவிட்டது, கடினமான வரிகள் கட்ட முடியவில்லை என்று கதிகலங்குவதற்குக் காரணமிருக்காது. ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல: மது, மாது, மோசடி, சூதாட்டம் இவைகள் தனத்தின் கனத்தைக் குறைக்கும். தேவையைப் பெருக்கும். இன்னும், ஒரு கெட்ட பழக்கம் இரண்டு குட்டிகள் போடும்! ஒரு வேளை நீங்கள் ஒரு டீ, அல்லது அவ்வப்பொழுது கொஞ்சம் மது, இன்னும் கொஞ்சம் நல்ல சாப்பாடு, சற்று நல்ல உடை, அவ்வப்பொழுது ஒரு சினிமா—இவற்றால் ஒன்றும் பிரமாதமான செலவாகிவிடாதென்று கருதலாம். ஆனால் ஏழை ரிச்சார்டு சொல்வதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்; சிறுதுளி பெருவெள்ளம். சில்லறைச் செலவுகளில் கவனம் வையுங்கள். ஒரு சிறு ஓட்டை, ஒரு பெரிய கப்பலைக்கூட முழுகடித்துவிடும். இன்பங்களை விரும்புபவன் இளைத்துத்தான் போவான். அதுவுமல்லாமல் முட்டாள்கள் விருந்து வைக்கிறார்கள்; அறிவாளிகள் அதைச் சாப்பிடுகிறார்கள். நேர்த்தியான உடைகளும் அலங்காரப் பொருள்களும் விற்கும் இந்தக் கடைவீதியில், நீங்கள் நின்றுகொண்டிருக்கிறீர்கள். ஆகவே ஏழை ரிச்சார்டு சொல்வதைக் கேளுங்கள்:

உங்களுக்கு அவசியமில்லாததை நீங்கள் வாங்கினால், சீக்கிரத்திலேயே உங்களுக்கு அவசியமானவற்றை விற்க நேரி

எச்சரிக்கை.

காலம் முழுதும் உங்கள் விருப்பம்போல் கழிக்கலாம் என்ற நம்பிக்கையை, உங்கள் சுதந்திரக் கனவுகளினின்றும் அழித்துவிடுங்கள். தினம் 12-மணி நேரமாவது சில காரியங்களைச் செய்யுமாறு இயற்கை கட்டளையிடுகின்றது. அவற்றைச் செய்யாவிடில் உங்கள் உயிருக்கே பங்கம் ஏற்படும். வேலைக்காக உள்ளது 12-மணி நேரம். இதில் தாமாகவாவது, மற்றவர்கள் மூலமாகவாவது நீங்கள் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ளவேண்டும். இன்றேல் இயற்கையால் அழிக்கப்படுவீர்கள்.

—பர்னார்ட்ஷா.

[illegible] ஒரு பைசாவென்றாலும் சற்று நிதானியுங்கள். அதாவது செலவு அற்பமானதாகத் தோன்றினாலும், உண்மையில் அது அற்பமல்ல. ஆனால் இதைக் கவனிக்காமல், கடைகளில் முட்டாள்தனமான வியாபாரம் தினம் நடந்துகொண்டிருக்கிறது. ஏழை ரிச்சார்டு சொல்வது போல்; அறிவாளிகள் மற்றவர்களுக்கேற்படும் இன்னல்களைக் கண்டு அறிந்துகொள்ளுகிறார்கள். முட்டாள்கள் தங்கள் கஷ்டங்களிலிருந்துக்கூட படிப்பினை பெறமாட்டார்கள். அலங்கார ஆடையணிய வேண்டுமென்ற ஆசை காரணமாக, தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அரைப்பட்டினி போடுவோர் அநேகர். வெண்பட்டும், வெல்வெட்டும், சல்லாவும் சமையலடுப்பை அணைக்கத்தான் உதவும் என்கிறார் ஏழை ரிச்சார்டு.

இவைகள் வாழ்க்கைக்கு அவசியமானவை அல்ல. வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் என்றுகூடக் கூறமுடியாது. பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கிறது என்ற ஒரே காரணத்தால், அவற்றைப் பலபேர் விரும்புகிறார்கள்! மனிதனுக்கு வேண்டிய செயற்கைத் தேவைகள், இயற்கைத் தேவைகளைவிட இப்படித்தான் அதிகமாகிவிட்டன. இவற்றாலும், இன்னும் இதர ஆடம்பரங்களினாலும், பெரிய மனிதர்கள் வறுமைக்குட்பட்டு, எவரை முன்னால் எள்ளி நகையாடினார்களோ; அவர்களிடம் சென்று கடன் வாங்கவேண்டிய நிலைக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களோ; தங்களுடைய உழைப்பாலும், சிக்கனத்தாலும், தங்கள் நிலைமையைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். ஆகவேதான் ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல்; மண்டியிட்டிருக்கும் பெரிய மனிதனைவிட, தன் காலில் நிற்கும் உழவனே மேல். அந்தப் பெரிய மனிதருக்குக் கொஞ்சம் நிலபுலன்கள் இருக்கலாம். அதிலிருந்து வருவாய் தேட வகை தெரியாதிருக்கலாம். இது பகல், இனி இரவே வராது. இவ்வளவு சொத்திலிருந்து சிறிது செலவு செய்துவிட்டால், என்ன தலையா முழுகிப்போய்விடும் என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல்; ஒரு முட்டாளும், இருபது ஷில்லிங்கும், இருபது வருஷமும் என்றைக்குத் தீரப்போகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சோற்றுப்பானையில் ஒன்றும் போடாமல் எடுத்துக்கொண்டேயிருந்தால், சீக்கிரம் அடிகண்டுவிடும். கிணறு வரண்டுபோகும் பொழுதுதான் தண்ணீரின் அருமை தெரியும்.

பணத்தின் மதிப்புத்தெரியவேண்டுமானால், வெளியே சென்று கேட்டுப்பார். கடன் கேட்பவன் கவலையடைகிறான். கடன் கொடுப்பவனும் கடனைத் திரும்பப் பெறுவதற்குள் கஷ்டமடைகிறான். ஏழை ரிச்சார்டு இன்னும் புத்திமதி சொல்லுகிறார்; ஒரு நல்ல பொருளை வாங்கினால் அதற்கிசைவாக இன்னும் பத்துப்பொருளை வாங்கவேண்டியிருக்கும். ஆகவே பின்னால் எழும் மற்ற ஆசைகளைப் பூர்த்தி செய்வதைவிட, முதல் ஆசையை அடக்கிக்கொள்வது சுலபமானது. பணக்காரரைப்போல் பாசாங்கு செய்ய ஏழை முற்படுவதுபோல் முட்டாள்தனம் வேறில்லை. மாட்டைப்போலாவதற்கு மண்டூகம் முயற்சித்து கலைதயாகிவிடும். பெரிய கப்பல்கள்

அலைகடலூடே வெகுதூரங்கூடச் செல்லலாம். ஆனால் சிறு படகுகள் கடற்கரையோரமாகத்தான் சுற்றவேண்டும். ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல்: பகலிலே ஐம்பதநேர் சாப்பிடும் கர்வம், இரவிலே இகழ்ச்சியைத்தான் சாப்பிடும். அப்படித்தான் வெளிவேஷத்தினால் ஏற்படும் கர்வத்தினால் என்ன பயன்? அதனால் வலியை நிவர்த்தி செய்து, ஆரோக்கியத்தை அதிகப்படுத்தமுடியுமா? ஆளின் மதிப்பை அதனால் அதிகப்படுத்தமுடியாது. பொறாமையைத்தான் தூண்டும். துரதிர்ஷ்டத்தைத் துரிதப்படுத்தும்.

இந்த அனாவசியமான பொருள்களுக்காக, கடன் வாங்குவது எவ்வளவு முட்டாள்தனம்! இந்தக் கடைகளில் நமக்கு ஆறுமாத கடன் கொடுக்கிறார்கள். ஆகவே அதனால் கையிலிருக்கும் பணத்தைச் செலவிடமுடியாத சிலர், இங்கு வந்து கூடியிருக்கிறோம். பணம் செலவிடாமலே படாடோபமாயிருக்க விரும்புகிறோம், ஆனால் கடன்படும்போது, நாம் என்ன செய்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்கள் சுதந்திரத்தின்மேல் மற்றொருவனுக்கு அதிகாரங் கொடுக்கிறீர்கள். குறித்த காலத்தில் கடனைக் கொடுக்கமுடியாவிட்டால், உங்கள் கடன்காரனைக் காண நாணுகிறீர்கள். அவனுடன் பேசும் பொழுது அஞ்சுகிறீர்கள். பலவீனமான சாக்குப்போக்குகளைப் பரிதாபகரமாயெடுத்துச் சொல்லுகிறீர்கள். சிறுகச் சிறுக நாணயமிழந்து, கீழ்த்தரமான பொய் பேசத் துணிகிறீர்கள். ஏழை ரிச்சார்டு சொல்வதுபோல; முதல் துர்ப்பழக்கம் கடன் வாங்குதல், இரண்டாவது பொய் பேசுதல். அதைப்பற்றியே மற்றொரு இடத்தில் 'கடன் முதுகின்மேல், பொய் சவாரிசெய்கிறது' என்று குறிப்பிடுகிறார். சுதந்திர மனிதன் எவனுமே, யாரையுமே பார்த்துப் பேச அஞ்சக்கூடாது. ஆனால் வறுமை அவன் உணர்ச்சியையும், உயரிய குணங்களையும் அழித்துவிடுகிறது. 'காலிப்பை நேராக நிற்கமுடியாது' என்று ஏழை ரிச்சார்டு கூறுகிறார்.

விளங்காதவை.

தம்மைப் பின்பற்றும் மக்களிடத்து, மத நம்பிக்கையை நிலை நாட்டவும், அவர்கள் மனதிலே பக்தி என்ற ஒருவித மயக்கத்தை வேரூன்றவும், குல குருக்களும், மதப் பாதுகாப்பாளரும் பிரயோகிக்கும் கருவி கரணங்களிலே, புத்திக்கே விளங்காத பலவிதமான சாஸ்திரச் சடங்குகளே எல்லா மதங்களிலும் பிரதானம் வகிக்கின்றன.

—டாக்டர் ஆர். பி. பராஞ்சிபை

சீமான்களைப் போலவோ, சீமாட்டிகளைப் போலவோ, நீங்கள் உடையுடுத்தால், சிறையிலடைத்தோ, அடிமையாக்கியோ, தண்டிப்போமென்று ஒரு அரசனோ, அரசாங்கமோ கட்டளை பிறப்பித்தால்; நீங்கள் அதைப்பற்றி என்ன நினைப்பீர்கள்? 'நான் சுதந்திர மனிதன், என் இஷ்டப்போல் உடுக்க எனக்குரிமையுண்டு. இந்த உத்தரவு என் உரிமையில் தலையிடுவதாகும், ஆகவே

182313

...து கொடுங்கோலாட்சி' என்று ...ங்கள் கூறமாட்டீர்களா? எனவே ...ம்மாதிரி உடைக்காசைப்பட்டு நீங்கள் கடன் வாங்கினீர்களானால், அம்மாதிரிக் கொடுமைக்கு நீங்கள் உட்படுத்திக்கொள்வது போலாகும். உங்கள் கடன்காரர்களுக்கு உங்கள் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து சிறையில் வைக்க அதிகாரமிருக்கிறது. உங்கள் வியாபாரம் முடிந்த பிறகு, நீங்கள் அதைப்பற்றியே நினைக்காமல் விட்டுவிடலாம். ஆனால் ஏழை ரிச்சார்டு சொல்கிறார்: கடன் கொடுத்தவர்களுக்கு கடன் வாங்கியவர்களைவிட ஞாபகசக்தி அதிகமாம். அதுவுமல்லாமல் அவர்கள் ஒரு மூடநம்பிக்கைக்கார வகுப்பைச் சேர்ந்தவர்கள். காலத்தையும் குறிப்பிட்ட நேரத்தையும் நன்றாகக் கவனித்து நடந்துகொள்பவர்கள். உங்களுக்குத் தெரியாமலேயே அந்த நாள் வந்துவிடும். நீங்கள் கடனைச் செலுத்தத் தயாராவதற்குமுன்பே கேட்கப்படும். அல்லது அதை நீங்கள் நினைவில் வைத்திருந்தால், தூரத்திலிருப்பதாக நினைத்திருந்த கெடு, துரிதத்தில் நெருங்குவதாகத் தோன்றும். காலம்; காலுக்கும் தோளுக்கும் இறக்கை கட்டிப் பறந்துவருவதாகத் தோன்றும். வாங்குபவன் வாங்கியவனை அடிமைகொள்ளுகிறான். ஆகவே அடிமைத் தளையை அகற்றி, சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். உழைத்து சுதந்திர மனிதனாயிரு. சிக்கன மனிதனாயிருந்து, விடுதலை வீரனாயிரு! இப்பொழுது ஒரு வேளை நல்ல நிலைமையிலிருப்பதால், ஒரு கெடுதலுமில்லாமல், ஒரு சிறிது தாராளமாகச் செலவிடலாமென்று நீங்கள் நினைக்கலாம். ஏழை ரிச்சார்டு சொல்வது போல; வயோதிகத்துக்காகவும், தேவைகளுக்காகவும், சமயப்பட்ட பொழுதெல்லாம் சேர்த்துவை எப்பொழுதும் காலை ...ரமாகவேயிருக்கமுடியாது முடிவாக ...க் கொள்கைதான் பகுத்தறிவு ... அநுபவம்; அருமையான ...டம் வைத்திருக்கிறது.

அறிவிலிகள், அதிலும், எதிலுமே ஒன்றும் அறிந்துகொள்ளமாட்டார்கள். புத்திமதிபோதிக்கலாம். ஆனால் நல்ல நடத்தையை நாம் கொடுக்க முடியாது என்பது உண்மை. இப்படியும் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். 'ஆலோசனை கேட்காதவனுக்கு யாரும் உதவி செய்ய முடியாது.' என்று அந்தப் பெரியார் ஆப்ரஃகாம் பேசி முடித்தார். அங்குக் கூடியிருந்த எல்லோரும் கேட்டு, அவர் கொள்கையை முழு மனதோடு ஆதரித்தார்கள். ஆனால உடனே அதற்கு மாறுதலான காரியம் செய்தார்கள். ஏனெனில், கடைகள் திறந்தவுடனே ஏராளமாக வாங்க ஆரம்பித்தார்கள். வரிச் சுமையைப்பற்றியோ, பெரியவர் கொடுத்த எச்சரிக்கைகளைப்பற்றியோ, யாரும் லட்சியம் செய்யவில்லை. அந்தப் பெரியவர்; நான் இருபத்தைந்து வருஷங்களாக அவ்வப்பொழுது சொல்லிவந்ததை நன்றாகப் படித்து, தன் கவனத்தில் வைத்திருந்திருக்கிறார். என்னைப் பற்றி அவர் அடிக்கடி குறிப்பிட்டது, மற்றவருக்குச் சலிப்பைத் தந்திருந்தாலும், நான் மிக்க மகிழ்ச்சியடைந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. நான் சொன்னதாகச் சொன்னதில், பத்தில் ஒரு பாகங்கூட என்னுடையதல்லவென்று என் மனதிற்குத் தெரிந்துதானிருந்தது. அவையெல்லாம் பல காலத்தவருடைய, பல தேசத்தவருடைய அறிவாகும். எப்படியும் அந்தப் புத்திமதியின் எதிரொலி காரணமாக, நான் பலனடைய விரும்பினேன். ஒரு புதுக் கோட்டுக்குத் துணி வாங்கவேண்டுமென்ற தீர்மானத்துடன் நான் அங்கு வந்திருந்தபோதிலும், இன்னும் கொஞ்சநாளைக்குப் பழைய கோட்டையே போட்டுக்கொள்வதென்ற தீர்மானத்துடன் வீடு திரும்பினேன். நீங்களும் அம்மாதிரி செய்தால், என்னளவு பயனை நீங்களுமடைவீர்கள்.

●●●●

“ என்னப்பன், ஆண்டவன் ... அவதாரமா? நீ அவரைப் பார்த்தால் அவசியம் இங்கே வரச் சொல்லம்மா ” என்று கனிவோடு சொன்னான் கந்தன்.....

நம்பினவருக்கு.

[ப. க. குஞ்சிதம்.]

★

கந்தன் ஓர் ஏழை உழவன். மிராசுதார் சிவலிங்கத்திடம் குத்தகைக்கு நிலம் வாங்குவான். அதில் விளையும் தானியத்தை விற்று மிராசுதாருக்குக் கொடுப்பான். மீதியில் குடும்பம் நடக்கவேண்டும். நான்கு குழந்தைகளுள்ள அவன் குடும்பத்தில், ஒரு வேளைதான் அடுப்பு எரியும். பாடுபட்டு உழைத்துப் பயிரிட்டாலும், அவன் வறுமையிலேயே உழன்று வந்தான். குத்தகைப் பணத்தை மட்டும் எப்படியாவது முன்னாடியே கட்டிவிடுவான். நேர்மையான உழவன்.

கந்தன் பழனியாண்டவன்மேல் அளவற்ற பக்தியுள்ளவன். தினம் காலையில் பழனியிருக்கும் திசை நோக்கிக் கும்பிட்டுத்தான் வேலையைத் தொடங்குவான். வருடம் தவறாமல் பழனிக்குப் பால்காவடி எடுத்துச் செல்வான். குழந்தைகள் பசிக்கு அழுதால் "முருகன் நம்மைச் சோதிக்கிறார்" என்பான். அவர் அருளால்தான் நாம் இவ்வளவாவது இருக்கிறோம். நமக்கு நற்கதி யளிப்பான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையோடு இருந்தான்.

நான்கு குழந்தைகளைப்பெற்ற பலவீனமும், சரியான உணவின்மையும், அவன் மனைவி செம்பாயியைப் படுக்கையில் கிடத்திவிட்டன. நோய் முற்றியது. வைத்தியம் செய்யப் பண வசதியும் இல்லை. மோசமான நிலையிலிருந்தாள் செம்பாயி.

* * *

அவ்வருடம் பருவமழை யின்மையால் விளைச்சல் குறைந்தது. மிராசுதார் சிவலிங்கத்திற்குக் கொடுக்க வேண்டியதில் ரூபா 50 பாக்கி நின்றுவிட்டது. அவர் ஒரு கோயில் கட்டுகிறார். அவசரச் செலவு. கந்தனைக் கூப்பிட்டார். வாய்தாவுக்கு மேல் ஆறு மாதமாய்விட்டது. இன்னும் பாக்கிப் பணம் வரவில்லை. ஏழு நாட்களுக்குள் பணம் கட்டியாகவேண்டும். இல்லாவிடில் சிறையில் அடைத்துவிடுவேன். என்று பயமுறுத்தி அனுப்பினார் மிராசுதார். கந்தனிடம் காலணாக்கூட இல்லை. வேதனையோடு வீடு திரும்பினான். ''ஆண்டவனே!'' என்று பெருமூச்சுவிட்டான்.

நோயுடன் போராடிக்கொண்டிருந்த செம்பாயி, கணவனின் வேதனை முகத்தைக் கண்டாள். என்னவென்று விசாரித்தாள். கந்

காக சுவாமிகளிடம் பூசைக்குக் கொடுத்துவிட்டேன். இந்த ஒரு தடவை பொறுத்துக்குங்க. கொஞ்ச நாளில் கொடுத்துவிடுகிறேன்" என்று கெஞ்சினான். பிச்சைக்காரப் பயலுக்கு சுவாமியாம், பூசையாம்! ஆண்டவன் உன் பூசையைத்தான் எதிர்பார்க்கிறாரா? ஏண்டா! பொய் சொன்னாலும் பொருத்தமாய்ச் சொல். மரியாதையாக பணத்தை எடுத்துவை. இல்லே; கொஞ்ச நேரத்தில் போலீஸ் வந்துவிடும்" என்றார் மிராசுதார். தன் நிலை கூறிக் கெஞ்சியவாறு நின்றான் கந்தன்; ஏழை பக்தன் என்ன செய்வான்?

தன் குழந்தையின் கழுத்திலிருந்த செயினைக் கந்தன் கழற்றிக்கொண்டு ஓடியதாகவும், பிடிப்பதற்குள் எங்கோ மறைந்துவிட்டான் என்றும், மிராசுதார் சொல்லிய தகவலின்மேல், போலீசார் வந்தனர். கந்தனை ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றனர். அடித்து, மிரட்டி விசாரித்தனர். "நான் திருடவில்லை பழனி முருகன் ஆணையாகத் திருடவில்லையே!" என்று கெஞ்சினான். இவன் ஆணைக்கு ஆதரவளிக்கவா ஆண்டவன் இருக்கிறான்?

* * *

கோர்ட் விசாரணையிலும், நடந்ததை விபரமாகச் சொன்னான். தன் குடும்ப நிலையையும் சொல்லிக் கதறினான். ஏழையின் சொல் ஏற்கவில்லை. மிராசுதாருக்கே வெற்றி. கந்தனுக்குச் சிறைத் தண்டனை.

கந்தன் குற்றம் சாட்டிச் சிறையில் அடைக்கப்பட்ட செய்தி அறிந்தாள் செம்பாயி. வறுமையும் வியாதியும் வாட்டி வதைத்திருந்த உள்ளத்திற்கு, அதிர்ச்சியைத் தாங்கும் பலமில்லை. வறுமைப் பேயிலிருந்து விடுபட்டது அவள் உயிர்! தாயிடம் பால்சுவைக்க அவள் மேல் விழுந்தது பச்சிளங் குழந்தை. அன்னையின் அணைப்பில்லாமல் வீரிட்டழுதது. மற்ற குழந்தைகள் அம்மா பசி, பசி, என்று அவளைச் சுற்றிநின்று கதறின. அவைகளுக்குத் தாய் தூங்குவதாகவே எண்ணம்.

அறையில் அடைக்கப்பட்டான் கந்தன். "அப்பனே! பழனியாண்டவா! உன்னை நம்பியிருந்தேன். நீ எனக்களித்த சுகம் இதுதானா? செம்பாயும் குழந்தைகளும் எக்கதி அடைந்தார்களோ! அவர்களை நீதான் காப்பாற்றணும். உன் பேரைச் சொல்லி 45 ரூபாயை அடித்துக்கொண்டு போய்விட்டானே, ஒரு பாவி. என் கதியைப்பார். நான் திருடனா? என்று கூவினான். சிறைக் காவலன் கந்தனைப் பேசாதிருக்குமாறு உறுமினான். கந்தன் பாட்டுக்கு தன் நிலையை முருகனிடம் முறையிட்டுக்கொண்டிருந்தான். முருகனோ இக் கண்றாவிக் காட்சிகள் எட்டாத மலையுச்சியில் இருந்தான்!

போலி வைத்தியரும், துணைவியான அந்தப் பெண்ணும் கந்தனைப் போன்ற பக்திமான்கள் இருக்கும் வரை, நமக்குக் குறைவில்லை என்று பேசி மகிழ்ந்த வண்ணம், நடைபோட்டுக்கொண்டிருந்தனர் அடுத்த ஊருக்கு!

"நம்பினவருக்கு நடராசா, நம்பாதவருக்கு எமராசா. பக்திமான்களுக்கு எந்தக் குறையும் வராதம்மா" என்று அடுத்த வீட்டுப் பாட்டியம்மா சொல்லிக்கொண்டிருந்தாள் தன் பேத்தியிடம்!

******

பொன் மொழிகள்

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டையடித்தலும், சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா.

—திருவள்ளுவர்.

முகஸ்துதி செய்பவன், பின்னலிருந்து கிண்டிவிடுபவன் இருவரும் ஒன்றுதான்.

—டென்னிசன்.

உள்ளத்திலும், உடலிலும் ஆண்மையுள்ளவனையே பெண் விரும்புவாள். ஆகவே உடற்கட்டுக் குலையாமல் காப்பது அவசியம்.

—பேடன் பவல்.

பகைவர்கள் எவன் பெயரை மச்சுகின்றனரோ அவனே மனிதன்.

—பாரவி.

தூற்றலையும், புகழையும் சமநிலையில் ஏற்றுக் கொள்பவனே தியாகியாக முடியும்.

—காந்தியார்.

சோம்பலும், சோர்வுமாக நூறுண்டுகள் உயிர்வாழ்வதைவிட, பெரு முயற்சியோடு ஒரு நாள் வாழ்ந்திருப்பதுமேல்.

—புத்தர்.

அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது; அன்பின் முதற் பாடம் செல்வத்தை அனைவருக்குமாகச் செய்வது.

—ரஸ்கின்.

மிகுந்த சிந்தனையைக் கிளப்பியெழச் செய்யும் நூல்களே சிறந்த வாழ்க்கைத் துணை.

—தியோடர் பார்க்கர்.

பயம் என்பது அறியாமையாலும், சலன புத்தியாலும் உண்டாகிறது.

—ராபின்சன்.

சொல்லும்வண்ணம் செயல் புரியும் மக்கள் தொகை பெருகினாலன்றி, உண்மையில் முன்னேற்றமில்லை.

—லஜபதிராய்

உண்மை எங்கே இழுத்துச் செல்லினும் அதைப் பின்பற்றிச் செல். கோழையாகவும், வேடதாரியாகவும் இராதே.

—விவேகானந்தர்.

ஒருவனுக்கு அறிவு இருந்தும், ஆற்றல் இல்லையேனில் அவன் வாழ்வு பாழே.

—ஹார்பர்ட்.

அப்பாவிப் பெண்ணால் புத்திசாலிக் கணவனை ஆண்டுவிட முடியும்; அதிக புத்திசாலிப் பெண்ணால்தான் முட்டாளை ஆளமுடியும்.

—கிப்ளிங்.

அநியாயமாய்ச் சிறையிலிடும் ஆட்சியிலிருக்கும் நியாயமான மனிதனுக்கு ஏற்ற இடம் சிறைச்சாலையே.

—தோரி.

ஒன்றன் உயிரைக் கொன்று உடம்பைத தின்னாதிருத்தல், ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட நல்லது.

—திருவள்ளுவர்.

இலக்கிய விமர்சனம்.

[பொ. அண்ணாமலை.]

இது பத்தரை மாற்றுப் பசும்பொன், அது ஒரு மாற்று குறைந்தது, இது மட்டப்பொன் என மாற்றிலே பாகுபடுத்திக்கூற உரைகல் உதவுகிறது. அதுபோல இலக்கியத்திலே அதன் தராதரத்தை; உயர்ந்தது, உபயோகமானது, மட்டம், அது பயனற்றது என ஆராய்ந்து கூறுவது விமர்சனம்.

ஒரு நூல் விமர்சகனிடத்திலே கிடைத்தபோது, அந்நூலின் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது. ஆசிரியரின் கருத்து சரியானதல்ல, கற்பனைத் திறன் குறைவு, மொழியிலே பிசகு என இழிவுபடுத்தி கூறுபபோது, அது வாசகர்களின் உள்ளத்திலே வேலை செய்யத் தொடங்கிவிடுகின்றது.

பண்டைக் காலத்திலே, இலக்கிய விமர்சனங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்த மன்றங்களிலே, நூல் அரங்கேற்றத்தின் போது நிகழ்ந்தன. மன்றத்திலே கூடிய புலவர்கள், அறிஞர்களிடையே நூல் அரங்கேற்றம் நடைபெற்றது. அந்த நூலிலே உள்ள குறைபாடுகளைக் கூறினர். ஏற்பட்ட சந்தேகங்களை நூலாசிரியனிடமிருந்துகேட்டு அறிந்தனர். இம்மாதிரி சமையங்களிலே, புலவர்களுக்கிடையே பொறாமையினாலோ, மற்ற சில காரணங்களாலோ அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து அம்முயற்சிகள் வீணாயின.

ஒரு நூலைப்பற்றிப் பலர் விமர்சனம் எழுதும்போதும், கருத்து பலவிதமானதாக இருப்பது இயற்கை. அதுவுமன்றி, அரசியலிலே மாறுபட்ட கருத்துடையவர்கள் விமர்சனம் கூறும்போது, தாழ்வான மனப்பான்மை கையாளப்படுகிறது. ஒரு நூலிலே கையாளப்பட்ட கருத்தை வெறுப்பவர்களும இருக்கலாம், விரும்புபவர்களும் இருக்கலாம், அது அவரவர்கள் மனோநிலையைப் பொறுத்தது.

ஒரு ஆசிரியர் ஒரு நூலை எழுதும்போது, சில மூலகாரணங்களைக் கையாளுகிறார். அந்த ஆசிரியர், நூலின முன்னுரையிலேயே அந்தக் காரணங்களைக் கூறுவதும் உண்டு. விமர்சகர்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு ஆராய்தல் சிறந்தது. அதுவுமன்றி, ஆசிரியரின் வாழ்க்கை அனுபவம், வாழ்ந்த சூழ்நிலை, கொண்ட கொள்கை ஆகியவற்றிலிருந்தும் அறியலாகும். அவற்றை முகவுரைப்பகுதியிலே காணலாம். கதாசிரியர்கள் கதையிலேவரும் உறுப்பினர்கள் மூலம், தமது விருப்பு வெறுப்புக்களையும், கொள்கைகளையும் வெளிப்படுத்துதல் இயல்பு. பிரசாரமற்ற கதையோ, காவியமோ கிடையாது.

சில விமர்சனங்கள், ஒரு நூலின்கண் காணப்படும கருத்தை, தமது கருத்துக்கிணங்கத் திரித்து அமைத்துக்கொள்வதும் உண்டு. இத்தகையவற்றிலே சிக்கிய நூல்களிலே திருக்குறள் ஒன்று.

இலக்கியம் ஓர் உடல். விமர்சகன் அந்த உடலிலே உள்ள உறுப்புக்களையும், அது இயங்கும் விதத்தையும், இயங்குவதால் ஏற்படும் மாறுதல்களையும் பாகுபடுத்திக காட்டும் கலைஞன்.

விமர்சகன் ஒரு நூலிலே உள்ள கருத்தை ஊன்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். நூல் எழுதப்பட்டதன் நோக்கம், அதிலே அடங்கியுள்ள கருத்து ஆகியவைகளை நேர்மையான, நடுநிலைக்கண்கொண்டுபார்க்கவேண்டும். அந்த நூலிலே காணப்படும் சில சொற்றொடர்கள் மேலெழுந்தவாரியாக கவனிக்கப்படும்போது, சாதாரணமானதாகத் தோன்றும். ஆனால் அதைப் பல கோணங்களிலிருந்து அலசி, ஆராய்ந்து பார்க்கும்போது, அதிலே புதைந்து கிடக்கும் கருத்து வெளிப்படும்.

இப்பணியிலே சில விமர்சகர்களிடம் சில ஊழல்கள் காணப்படும். உயர்ந்த ரகமான ஒரு நூல் விற்பனையாகாமல் தேங்கிநிற்கும்போது, மட்டமான-செல்லாத பொருள்களைப்புகழ்ந்து செலவழிக்கும் தரகர்களாக மாறிவிடுகின்றனர். அந்தச் சமயங்களிலே. அவர்கள் வாசகர்களின் நிலையையோ, நூலின் தரத்தையோ சிந்திப்பதில்லை. புகழ்ந்து எழுதிவிடுகின்றனர். இது இத்துடன் நில்லாது நேர்மையான ஒருவன் அதற்கு மறுப்பு எழுதும்போது, அவன் மறுப்புக்கு மறுப்பும் எழுதத் தொடங்கிவிடுகின்றனர். பணத்தால் விளம்பரப் பலகையாகி விடுகின்றனர் விமர்சகர்கள். இது தவறு. விமர்சனம் ஒரு கலை. ஒரு அறிஞர் கூறியதுபோல; விமர்சனம் கத்திமேல் நடப்பது போன்றதாகும். நல்ல விமர்சகர்கள் தீர்ப்புக்கூறும் நீதிபதி போன்றவர்கள்.

விமர்சகர்கள் நக்கீரர்கள். காணும் நூல்களிலே குறைபாடு காணப்படின் கூறாது விடக்கூடாது. பணமெனும் நெற்றிக் கண்ணைத் திறந்தாலும், நீதியையே நாடுபவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் வளர்ந்துவரும் இலககியங்கள் மாசு நீங்கி காணப்படும்.

சிரிக்காதே!

★

மகன்: (ஓடிவந்தவன்) அப்பா! வழி விடப்பா. கோபு என்னைத் தொடவர்ருன்.

தந்தை: தொட்டா தீட்டு ஒட்டிக் கொள்ளுமோ? அவனும் நமய சாதிக்காரன்தாண்டா?

மகன்:— அவன் என்னைத் தொட்டா "அவுட்" ஆயிடுவேம்ப்பா! நாங்க சங்கு தொடர விளையாட்டல்ல விளையாடரோம்.

—என். எஸ். வாசன்.

* * *

ரத்தினம்: டேய்! உங்கப்பா தினம் கோயிலுக்கு, ஒரு சாமானலே என்னடா கொண்டுபோகிருர்? யாருக்காக?

பூசாரி மகன்: தினம் சாமிக்காகத் தான் பொங்கல் கொண்டு போகிருர். ஏன்?

ரத்தினம்: ஏண்டா! தினம் பொங்கலைச் சாப்பிட்டும், சாமி முன் இருந்தமாதிரிதானே இருக்கிறது பெரிசா ஆகலையே!

—ப க குஞ்சிதம்.

* * *

தாய்: (படத்திற்குப் பூசை செய்து) கடவுளே! நாங்கள் எப்பொழுதும் இதே மாதிரி கஷ்டப்பட வேண்டுமா? விமோசனமில்லையா?

மகன்: மகளே! உன் பக்திக்கு மெச்சினேன். உனக்கு என்ன வேண்டும்?

தாய்: (சினந்து) ஏண்டா! பரிகாசமா பண்ணுகிருய்?

மகன்: இல்லேம்மா. நேற்று சினிமா பார்த்த ஞாபகம் வந்தது!

—சி. என். அபிப.

பார்ப்பனப் பெண்: (வெகுதூரம் நடந்த களைப்பால்) ஆத்திலே போய் விழுந்தாட்டேன்னு நிம்மதியாப் போயிடும்.

தமிழ்ப்பெண்: வேண்டாம்மா! நாய் நக்கிக் குடிக்கவே தண்ணீர் இல்லே. இப்ப விழுந்தா மண்டைதான் உடையும்.

—செ. ம. மு—சோளிங்கபுரம்.

* * *

பிச்சைக்காரன்: முருகா! வடிவேலா! பரமசிவம்! நாராயணு! வைகுந்தவாசா! பழனியாண்டவா! கந்தையா! ஒரு காலணுக் கொடய்யா!

கடைக்காரன்: எப்பா! இத்தனை பேரைச்சொல்லி காலணு கேட்கிறாயே; அவர்கள் மதிப்பு இவ்வளவுதானு?

பிச்சைக்காரன்: இல்லிங்க. ஒரு தம்பிடி கூடக் கொடுக்கிறதில்லீங்க!

—ல மா. வேங்கடாசலம்.

* * *

வரதன்: (கல்தடுக்கி விழுந்தவனைத் தூக்கிவிட்டு) ஐயா! என்னேறு மெதுவாக நடந்துவந்தீரே! பயம், எதைக்கண்டு இப்படி ஓடிவந்தீர்?

விழுந்தவர்: தம்பி! அதோ பார், பூனை. அது குறுக்கே வந்தால், சகுனத்தடை. அது வருவதற்குள் தாண்டிப்போய்விடவேண்டுமென்று ஓடிவந்தேன்.

வரதன்: ஐயயோ! அது பொம்மைப் பூனையாயிற்றே!

—கா. சி. பூபதி, காட்டுப்பநல்லூர்.

காசியாத்திரை.

ஆவணக் காப்பக

எஸ். எஸ். தென்னரசு.

சென்னை-600 008

'இண்டோ-சிலோன் எக்ஸ்பிரஸ் காரைக்குடியை விட்டு மாலை 5-30 மணிக்குக் கிளம்பியது. இரண்டாம் வகுப்பு வண்டியிலிருந்த திருவரங்கம், அருகிலிருந்த தன் இளம்மனைவி முத்துலெட்சுமியைப் பார்த்து, எல்லாச் சாமான்களையும் எடுத்துவைத்து விட்டாயா என்று கேட்டார். என்னிடம் ஒப்படைத்த சாமான்களைக்கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். சிதம்பரத்திடம் கொடுத்த சாமானைப் பற்றி, அவரிடம்தான் கேட்கவேண்டும் என்று, எதிர்த்த ஆசனத்தில் அமர்ந்திருந்த சிதம்பரத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு சொன்னுள் முத்துலெட்சுமி.

திருவரங்கம், காரைக்குடி வட்டாரத்திலேயே பேர்போன மிராசுதார். வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். அவரை மீறுவோர் அவர் உண்டாக்கும் துன்பங்களிலிருந்து மீளமுடியாது. திருப்புகழும், திருவாசகமும்தான் ஓய்வு நேரங்களில் அவருக்கு உற்ற நண்பர்கள்.

முத்துலெட்சுமி அவரின் மூன்ருவது மனைவி. அவள் ஒரு மல்லிகை! பருவ எழிலில் மிதந்துகொண்டிருந்த அவளுடைய அங்கங்கள், தங்கம் போல் மின்னின. இளமையின் வேகம் பிரதிபலித்தது. எதிர்ப்பட்டோர், அவளுடைய பார்வையில் சிக்கித் திறுதிறுத்துப் போகாமல் இருக்க முடியாது. கூந்தலழகை ஒருமுறை திரும்பிப் பார்க்காதவரைக் காண முடியாது. [illegible] களும், மோகனப் புன்னகையும் பிரமச்சரியத்தைப் புறமுதுகு காட்டச்செய்வன.

திருவரங்கத்திற்குப் பிள்ளையில்லை. அதற்காக அவர் போகாத கோயிலில்லை. கடைசி முறையாக காசிக்குப்போய் தீர்த்தமாடி வருவதென முடிவுசெய்தார். என்ருலும் ஒருசில சமயங்களில் "காசி வெகுதூரமாயிற்றே, இடையில் ரயில் கிழில் கவிழ்ந்து விட்டால், இவ்வளவு சொத்தும் போய்விடுமே. அதற்கு ஒருத்தது எடுத்துக் கொள்ளலாமே" என்று யோசிப்பார். இவ்வாறு அவருக்கு ஆசை தூண்டியது, அச்சம் அதை அடக்கியது. இதன் காரணமாக திருவரங்கம் பயணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தார். ஒரு நாள் முத்துலெட்சுமி அவரிடம் ஆசையோடு சொன்னுள்: அடுத்த வீட்டு சிதம்பரத்துக்கு லீவு முடிந்துவிட்டதாம், நாளை மறுநாள் மறுபடியும் டில்லிக்குப் போகிருராம் என்று! அடடே! பிள்ளையாண்டான் என்சொல்லைத்தட்டவேமாட்டானே. காசிவரை வந்து விட்டு டில்லிக்கு போகலாமென்ருல், நிச்சயம் வருவான் என்று சொல்லிவிட்டு, சிதம்பரத்தை அழைத்தார், விருப்பத்தைச் சொன்ஞர். சிதம்பரமும் ஒப்புக் கொண்டான்.

* * *

மூவருமாக இண்டோ-சிலோன்

எக்ஸ்பிரஸில் காசிக்குப் பயணமானார்கள். தள்ளாதவயதில் மூட்டைமுடிச்சுகளைத் தூக்க இயலாதென்பதற்காக, எல்லாவற்றையும் சிதம்பரமும், முத்துலெட்சுமியுமே பகிர்ந்து வண்டியில் ஏற்றினார்கள்.

திருச்சி சென்றதுமே, கொண்டு போன கட்டுச்சோற்றை சாப்பிட்டு விட்டு மூவரும் படுத்தனர். திருவரங்கம், தனக்கே உரித்தான கம்பளிப் போர்வையால் உடல்முழுவதையுமே மூடிக்கொண்டு படுத்து விட்டார். சிறிது நேரத்தில் அவரின் குறட்டை புகைவண்டிச் சத்தத்துடன் போட்டியிட்டது. தூக்கத்தில் அவர் கும்பகர்ணன் பரம்பரை.

* * *

நள்ளிரவு. பலகணி வழியாக நிலவொளி வந்துகொண்டிருந்தது. அப்பொழுது வரப்போகும் புகைவண்டி நிலையம் விழுப்புரம். ஒருஉருவம் எழுந்து முத்துலெட்சுமியின் படுக்கைக்குச்சென்றது. முத்துலெட்சுமி புரண்டு படுத்தாள். அதனால் அவளுடைய மேலாடை நெகிழ்ந்து, மெல்லிய ரவிக்கையால் மூடப்பட்டிருந்த அவளுடைய மார்பகம் விரிந்து சுருங்கியது. அவளருகில் சென்ற உருவம், தன்னுடைய கரங்களால் கட்டழகியின் கண்ணாடிக்கன்னங்களைத் தடவிற்று. அப்போதுதான் உறங்கிக் கொண்டிருந்த ஊர்வசிக்கு உணர்ச்சி தட்டுப்பட்டது. குருதி ஓட்டம் குன்றியது. சோர்வடைந்த நரம்புகளையுடைய கரங்களையே தொட்டுத் தொட்டுப் பழகிய அவளுக்கு, முறுக்கேறிய நரம்புகளையுடைய ஒருகரம், தன்னைத் தீண்டிக் கொண்டிருக்கிறது என்பது நன்கு புலப்பட்டது. என்றாலும் அவள் தடுக்கவில்லை—தடுக்கமுடியவில்லை. ஏன்? தூக்க மயக்கத்தாலல்ல: பருவ உணர்ச்சி, அவள் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிட்டது. இயற்கையிலே உண்டான பயங்கர இச்சை, அவளைப் பதுமையாக்கியது. இன்பம் எங்கே எங்கே என்று ஏங்கிக் கொண்டிருந்த அவயவங்களின் பசிக்கு, அந்த உருவம் உணவாகியது. திருவரங்கத்தின் குறட்டையொலி, இரண்டு உள்ளங்கட்கும் இன்ப நாதமாகியது.

* * *

வண்டி செங்கல்பட்டைத் தாண்டிவிட்டது. பாதை மாறும்போது, வண்டியில் ஏற்பட்ட ஆட்டத்தால், திருவரங்கத்தின் பக்கலிலிருந்த கூசா சாய்ந்தது, தண்ணீர் அவர்மீது பாயவே, அவர் திடீரென்று விழித்துக்கொண்டார். பக்கத்திலிருந்த சிதம்பரத்தின் படுக்கையில் சிதம்பரத்தைக் காணவில்லை; திகைத்தார். உடனே பார்வையை முத்துலெட்சுமியின் மீது செலுத்தினார். அவ்வளவுதான்! கல்லால் தாக்குண்ட கண்ணாடித்தகடு வெடிப்பது போலிருந்தது அவருக்கு உலகம். இருபதாயிரம் செந்தேள்கள் அவர் இதயத்தைக் கொட்டுவது போலிருந்தது. கைகளை உதறிக் கொண்டார். என் குலப்பெருமையைக் குன்றச் செய்து விட்டாளே குச்சிக்காரி, தேடிவைத்த மானத்தைத் தெருவில் விட்டு விட்டாளே தேவடியாச்சிருக்கி என்று முணங்கினார். பதைத்தார். ஓடும் ரயிலின் கதவைத்திறந்தார். அந்தப்பேய் இருட்டில், ரயிலிலிருந்து தரையைப் பார்ப்பதற்கு பயமாய்த்தானிருந்தது. கண்களை மூடிக்கொண்டார். வெறி

பிடித்தவர் போல் மீண்டும் பார்த்தார். இப்போது கண்களை மூடவில்லை. கதவு டபார் என்று மோதியடித்தது. "வீச்" சென்று ஒரு சப்தம். வண்டி போய்க் கொண்டே இருந்தது.

* * *

திடுக்கிட்டு விழித்தாள் முத்துலெட்சுமி. நடந்தது கனவல்ல என்பதை, தான் சிதம்பரத்தின் அணைப்பிலிருப்பதின்மூலம் தெரிந்துகொண்டாள். குலைந்த ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு, எழுந்து கணவனின் படுக்கையைப் பார்த்தாள். திருவரங்கத்தைக் காணவில்லை. அவருடையகம்பளிப் போர்வையும் காணவில்லை! கண்களைத் துடைத்துக் கொண்டு பலகணி வழியாக பயங்கர இருளைப் பார்த்தாள். மின்மினிப் பூச்சிகள் தான் அவளுடைய கண்களுக்குத் தெரிந்தன. சிதம்பரத்தை எழுப்பி விஷயத்தைச் சொன்னாள். அவன் உள்ளம் நடுங்கிற்று. காசி நாதனைத் தரிசித்து, குழந்தைபெற வந்தவரைப் புகை வண்டி விழுங்கி விட்டதோ என்றான் சிதம்பரம். அங்கு மிங்கும் தேடினான். இல்லை; அவர் முத்தியடைந்து விட்டார். யாத்திரையின் பலன் கிடைத்து விட்டது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். கண்கள் கலங்கின இருவர்க்கும். அதே சமயத்தில், ஒரு நிம்மதி கலந்த ஆசை இருவர் உள்ளத்திலும் தோன்றிப் படாமல் இல்லை. என்செய்வது? காசியாத்திரை, இவ்வாறு கிழவருக்கு மரணயாத்திரை யாகவும், இவர்களுக்குக் காதல் யாத்திரையாகவும் முடிந்தது. ★★

துறத்திவிடு!

ஸ்ருதிஸ்துவேதோ விஜ்ஞேயோ
  தர்மசாஸ்த்ரம் துவைஸ்ம்ருதி:
தேஸர்வார்த்தேஷ்வ மீமாம்
  ஸ்யே தாப்யாம் தர்மோஹி நிர்சித:
யோவமன்யே ததேமூலே ஹேது
  சாஸ்த்ராஸ் ரயாத்த:
ஸஸாது பிர்பஹிஷ்கார்யோ
  நாஸ்திகோ வேத நிந்தக:

—மநுதர்மம்

பொருள்:- வேதங்களும், ஸ்மிருதிகளும் தருமத்திற்குஇருப்பிடங்களாதலால், இவற்றை யுக்தி வாயிலாக எவனாவது கண்டிக்க முயன்றால், அத்தகைய வேதநிந்தகனாகிய நாத்திகனை, நல்லோர்கள் ஊரை விட்டுத் துரத்தி விட வேண்டும்.

ஒரு இனம் போக போக்கிய வாழ்விலே திளைப்பதற்காக, மற்றோர் இனத்தை அடிமைகளாக்கப் படைக்கப்பட்ட கொடிய ஆயுதங்களான வேதங்களையும், ஸ்மிருதிகளையும் எவனும் ஆராயவோ, கண்டிக்கவோ கூடாதாம்! குட்டு வெளிப்பட்டு, ஏமாற்று வாழ்வுக்கு இறுதிக்கடன் நிகழ்ந்து விடுமே என்பதற்காக இத்தகைய பாதுகாப்பு மிரட்டல்! சுரண்டல் சம்பிரதாயத்திற்கு சூழ்ச்சிக் கவசங்களே, வேதநிந்தகன், நாத்திகன், ஊரைவிட்டுத்துரத்து என்ற தருமநியாயங்கள்!

"யார் எதைச் சொல்லினும் ஆராய்ந்துபார்" என்று அறிவைப் பிரதானப் படுத்தும் நாட்டிலே, இத்தகைய மநுதர்மங்கள், வேதங்கள், ஸ்மிருதிகள் இருக்கலாமா? இவற்றைப்பாதுகாக்க முயலும் வஞ்சகர்களைச் சும்மா விடலாமா?

—"வாலி"

ராய்ட்டர்-செய்தி நிறுவனம்.

இன்று உலகின் பெரும் பாகத்துக்கு செய்திகளைப் பரப்பி அரிய சேவை செய்து வரும் ராய்ட்டர் நிறுவனத்தின் நூற்றாண்டு விழா 9-7-51-ந்தேதி ஆரம்பித்து நடைபெறுகிறது.

ஐரோப்பாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட செய்தி நிறுவனங்களுள் ஒன்றான ஹவாஸின், பாரிஸ் காரியாலயத்தில் மொழி பெயர்ப்பாளராகத் தொழிலை ஆரம்பித்த, ஜூலியஸ் ராய்ட்டர் என்ற ஜெர்மன் யூதர்தான், இப்பெரிய ஸ்தாபனத்துக்குக் காரணமாக இருந்தவர். செய்திகளைச் சேகரிக்கும் முறையை அவர் விரைவில் தெரிந்து கொண்டார். தனது வர்த்தகச் செய்திகளைக் கொண்டுபோக, புறாக்களை உபயோகிப்பதன் மூலம் அவர் வாழ்க்கை நடத்த முயன்றார். அப்பொழுதுதான் தந்திக் கம்பிகள் போட்டு வந்தார்கள். 1851-ல் ராய்ட்டர் லண்டன் சென்று, அங்கு ஒரு சிறு காரியாலயத்தை ஆரம்பித்தார். 12 வயது சிறுவன் ஒருவனை மாத்திரம் அவர் உதவியாக வைத்துக் கொண்டார். அவர் முதன்முதலில் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு விலைகளை அறிவிப்பதோடு இருந்தார். ஐரோப்பாவில் அவருக்குப் பல நிருபர்கள் இருந்ததால், பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்குச் செய்திகளை விற்கவும் அவர் ஆரம்பித்தார்.

இவ்வாறு ஆரம்பித்த ராய்ட்டர் இன்று ஒரு தனிப்பட்டவர் கம்பெனியாக இல்லை. பிரிட்டிஷ், ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைச் சங்கங்களுக்குச் சொந்தமான தர்ம நிறுவனமாக இயங்குகிறது.

1836-ல் தான், இந்தியாவில் முதன் முதலாக ராய்ட்டர் காரியாலயம் திறக்கப்பட்டது. அப்போது தந்திக் கம்பிமூலம் ஐரோப்பா, துருக்கி, பர்ஷியா வழியாகச் செய்திகள் அனுப்பப்பட்டன. 1869-ல் பம்பாயிலிருந்து ஏடனுக்கு முதன் முதலாக சப்மரின் கேபிள் போடப்பட்டது. சூயஸ் கால்வாய்வழி ஏற்பட்டதையடுத்து, செய்தி அனுப்புவது துரிதமடைந்தது. எளிதாகவும் ஆயிற்று. 1919-ல் இந்தியா அஸோஸியேடட் பிரஸ்ஸை, ராய்ட்டர் நிறுவனம் ஆரம்பித்தது. முதல் காரியாலயம் சென்னையில் தான், காலஞ் சென்ற கே. ஸி. ராயின் தலைமையில் அமைக்கப்பட்டது. ஜூலியஸ் ராய்ட்டர் பெரும் பணமும் அந்தஸ்தும் பெற்றுக் காலமானார். அவர் சந்ததியாரிடமிருந்து ராய்ட்டர்ஸ்தாபனம், ஸர் ரோட்ரிக் ஜோன்ஸ் என்பவரிடம் மாறியது. ராய்ட்டர் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் கூட்டுச் சொத்தாக வேண்டும் என்று 1925-ல் ஸர் ரோட்ரிக் தீர்மானித்தார்.

1929-ல் வைர்லெஸ் வந்தது. அதிலிருந்து 12 ஆண்டுகளுக்குள்ளாக ராய்ட்டரின் செய்திகள் எல்லாம் வைர்லெஸ் மூலம் செல்ல ஆரம்பித்தன. இவை யுத்த காலத்தில் இன்னும் அதிகமாயின. வளர்ந்துவரும் ராய்ட்டர் செய்தி நிறுவனம், பயனுள்ள அறிவுச்சின்னமாக விளங்குகிறது.

அறிஞர் வரலாறு.

ஆப்ரஃகாம் லிங்கன்.

1809-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ம் நாளில், வட அமெரிக்காவில், கெண்டகி என்னும் பகுதியைச் சேர்ந்த ஃகட்சன் வில்லி என்னும் சிற்றூரிலே, ஒரு எளிய மரவீட்டில் பிறந்தான் ஆப்ரஃகாம் லிங்கன்.

பரம்பரைத் தச்சர்குடியைச் சேர்ந்த ஏழை தாமஸ் லிங்கனுக்கும், அவர் மனைவி நான்சி ஃகாங்க்ஸிக்கும், லிங்கன் இரண்டாவது குழந்தை. தாமஸ் லிங்கன் உழவுத் தொழில் புரிந்தும், விறகு விற்றும் குடும்பத்தை நடத்தினார். வறுமை அவரை ஒரு இடத்திலே வாழவிடாமல் துரத்தியடித்தமையால், ஆப்ரஃகாம் நிலையாக ஒரு பள்ளியில் சேர்ந்து கற்பதற்கு வழியில்லாது போயிற்று.

ஆப்ரஃகாம் பள்ளியில் பயின்ற நாள், மொத்தம் 360 நாட்களே என்று வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். 10 வயதுவரை, அன்னை ஃகாங்க்ஸியிடமும், அதற்குமேல், இரவல் புத்தகங்கள் மூலம் சொந்த முயற்சியாலுமே கல்வியறிவு பெற்றார் ஆப்ரஃகாம். தந்தையோடு சேர்ந்து வயலில் உழைத்த நேரம் போக, மீதி நேரத்தை படிப்பதும், படித்த நூல்களின் கதைகளைச் சிறுவர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு சொல்வதுமாகக் கழித்தான். எனவே ஆப்ரஃகாமுக்குச் சிறு வயதிலேயே சொல்வன்மை வாய்த்தது. மற்ற சிறுவர்கள் அவனைப் பாராட்டினர். பின்பற்றினர்.

"ஓர் ஆண்மகன் 21-வயது வரை தந்தைக்கு உதவவேண்டும், அதன் பிறகு சுயேச்சையாக நடக்கலாம்" என்ற அமெரிக்க சம்பிரதாயப்படி தனது 22-ம் வயதில், 1830-ல் வெளியுலகைக் காணப் புறப்பட்டான் ஆப்ரஃகாம்.

1828-ல் நியூ ஆர்லியன்ஸ் என்ற ஊருக்கு, ஆப்ரஃகாம், தங்கள் விளைபொருட்களை விற்பதற்காகப் படகில் ஏற்றிச்சென்றபொழுது, முதன் முதலாக வெள்ளை ஆதிக்க வெறியர்களின், அடிமை வாணிபக் கோரதாண்டவத்தைக் கண்டார். மனம் புழுங்கினார். "மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது அநியாயம்" என்று முணுமுணுத்தது அவர் வாய்.

1831-ல் மீண்டும் நியூஆர்லியன்ஸ் நகரத்திற்கு வந்து தங்கினார். ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள காங்கோ காடுகளில், சுயேச்சையாகச் சுற்றித்திரிந்த நீக்ரோக்களை பிரிட்டிஷ் வாணிபர்கள் வேட்டையாடிக் கொண்டு வந்து, அடிமைகளாக விலை கூறி விற்றனர் அந்நகரச் சந்தையிலே. பல்லிடித்து மாட்டைப் பதம்பார்ப்பது போல, பண்ணை முதலாளிகள் விலைக்கு வாங்கும் நீக்ரோக்களைத் தட்டியும், கொட்டியும், இழுத்தள்ளி உருட்

டியும் பரிசோதித்தனர். ஏரில் பூட்டி உழவும், நீர்இறைக்கவும், நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைசெய்யவும் தக்க உடல் வலிமை இருக்கிறதா என்று ஒவ்வொருவனையும் சாட்டை கொண்டு அடித்துப்பார்த்தனர்.

இந்தக் காட்சிகளைக் கண்ட ஆப்ரஹாம் லிங்கனின் நெஞ்சம் பதைத்தது. குருதி கொதிப்படைந்தது. இது போன்ற கொடுங்காட்சிகள் அவர் மனதில் வைரம் பாய்ச்சின. "எனக்கு வாய்ப்பு கிடைக்குமானால், நீகிரோ மக்களின் அடிமைத்தளைகளை அறுத்தெறிவேன். கடுமையாகத் தாக்கி அழித்தே தீருவேன்" என்று வஞ்சினம் கூறினார்.

பின்னர் தொழிலுக்காகத் தேடியலைந்தார். படகோட்டியாகச் சில நாள் பணிபுரிந்தார். நிலம் அளக்கும் சர்வேயராகக் கொஞ்ச நாள் வேலை செய்தார். நியூசாம் என்ற ஊரில், ஆபட் என்றவரின் மளிகைக் கடையில் திறமையாக வாணிபம் செய்தார். அந்தக்கடை மூடப்பட்டு மீண்டும் வேலையில்லாத்திண்டாட்டம்வந்தது. வேலையற்றகாலத்தில், சிந்தனைக்கு வேலை கொடுத்து, பகுத்தறிவைப் பெருக்கிக் கொண்டார். தனக்கு உண்மையென்றுபட்ட கருத்துக்களை, மக்களிடையே தைரியமாக உலவவிட்டார். நல்ல பேச்சாளியானார்.

அச்சமயத்தில் வட அமெரிக்காவின் ஒரு பிரிவாகிய இல்லினாய்ஸ் என்ற நாட்டில், சிவப்பு இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்க்கும் போர் மூண்டது. லிங்கன் போர் வீரனாக யுத்த பூமிக்குச் சென்றார். சிவப்பு இந்தியர் அ

> உண்மையும், நேர்மையும்தான் ஆக்கும் சக்திகள் என்பதை நினைவுறுத்திக்கொள்வோமாக. அந்த உறுதியிலே இறுதிவரைக்கும், நாமறிந்தவரை, நமது கடமையைச் செய்ய முற்படுவோமாக.
>
> —ஆப்ரஹாம் லிங்கன்.

டக்கப்பட்டனர். போர் முடிந்ததும், மீண்டும் நியூசாமுக்கே திரும்பினார். தபால் நிலையமொன்றில் வேலைகிடைத்தது. பல் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் படிக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அறிவை வளர்த்தார். சட்டநூல்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றார். வழக்கறிஞரானார். 1836-ல் இல்லினாய்ஸ் நாட்டு அரசியல் மன்றத் தேர்தலில் ஈடுபட்டு, அடிமைமுறையால்வரும் அல்லல்களையும், அதனை ஒழிக்க வேண்டிய அவசியம் குறித்தும் மக்களிடையே பிரசாரம் புரிந்தார். மக்களின் ஆதரவைப்பெற்றார். வெற்றியடைந்தார்.

வழக்கறிஞராகப் பணிபுரிந்து பெரும் புகழடைந்தார். பொருள் வருவாயும் கிட்டிற்று. ஒரு அழகான வீட்டை விலைக்கு வாங்கினார். மனதுக்கேற்ற மங்கையொருத்தியை மணந்தார். இல்லற வாழ்வில் ஈடுபட்டார். எனினும் தன்வாழ்க்கை லட்சியம் பூர்த்தியடைந்துவிட்டதாக அவர் கருதிவிடவில்லை. சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அடிமை முறை ஒழிப்புக்கு மக்களின் ஆதரவைத் திரட்டிவந்தார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின்

அரசியல் பொது மன்றத்திற்கு, 1846-ல், இல்லினாய்ஸ் நாட்டினர் லிங்கனைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பினர்.

1860-ல் ஐக்கியநாடுகளின் அரசியல் பொது மன்றத் தலைவர் தேர்தல் வந்தது. அடிமைகளுக்கு விடுதலை கோரும் விடுதலைக் கட்சியினர்—வடபகுதியினர்—ஆப்ரஹாம் லிங்கனை ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். லிங்கன் ஐக்கிய அமெரிக்கத் தலைவரானார். அடிமை வாணிபத்தில் ஊறிப்போயிருந்த,தென் பகுதியினரில் பெரும்பாலோர் சீற்றமடைந்தனர். தங்கள் பரம்பரைச் சுரண்டல் பிழைப்புக்கும், ஆதிக்கவாழ்வுக்கும் இறுதிக் காலம் வந்ததென்று பொங்கியெழுந்தனர். வடபகுதிக்கும், தென்பகுதிக்கும் உள்நாட்டுப் போர் மூண்டது! சமாதானத்திற்கு லிங்கன் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எனவே; அவரே வடபகுதியின் அரசாங்கப் படையில் கலந்து போரை நடத்தினார். தென்னவரை வெல்வதற்கு, இரவு பகலாகச் சிந்தித்தார். தன் லட்சியத்தை நிறைவேற்றத் துடித்தார். போர் ஆண்டுக்கணக்கில் நீண்டது.

1361-ம் ஆண்டு, டிசம்பர் 11-ம் நாள், திடீரென்று அமைச்சர் குழுவைக்கூட்டினார். தன் சட்டைப் பையினின்றும் அறிக்கையொன்றை எடுத்துப் படித்தார்.

வரும் 1862-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள், முதல்நாள் தொடங்கி, வட நாடுகள், தென்னாடுகள் என்ற இரு பகுதிகளிலும் அடங்கியுள்ள எல்லா அடிமை மக்களும், விடுதலை பெற்ற

> அறிவுத் துறையிலே வளர்ந்துகோண்டு வருகின்ற மனிதனைப்பற்றித்தான் ஒவ்வொரு நாளும் கவலைப்படுகிறேனே தவிர, மற்றவைகளைப் பற்றி நான் கவலை கொள்வதில்லை.
>
> —ஆப்ரஹாம் லிங்கன்.

சுதந்திர மக்களாவர். கருணையோடு அடிமைகளை விடுதலை செய்யும் முதலாளிக்கு, ஐக்கிய அரசாங்கம் சிறிது நஷ்டஈடும் கொடுக்கும்."

அமைச்சர் குழு ஆதரித்தது. விடுதலைச்சாசனம் வெளியாயிற்று. எங்கும் வியப்பு! விடுதலைபெற்ற நீகிரோ மக்கள் லிங்கனை வாழ்த்தினர். வட பகுதிப் படையில் ஏராளமாகச் சேர்ந்து, தென் பகுதினரான ஆதிக்க வெறியாகளைத் தாக்கி முறியடித்தனர். **ஆப்ரஹாம் லிங்கன் வாழ்க** என்ற வாழ்த்தொலி வானைப் பிளந்தது

ஆப்ரஹாம் தோல்வியில் கலங்காத வீரன். 1858-ல் அமெரிக்கப் பொது மன்றத் தேர்தலில் தோற்றபோது, நகைச்சுவையோடு அவர் சொன்னார்: "பலமாக இடிபட்டு வலியெடுத்ததால் சிரிக்க முடியாமலும், பெரியவனாகையால் அழமுடியாமலுமான நிலையிலிருக்கும் வாலிபனுடையதைப் போன்றது என் நிலை."

அவர் எழுதியுள்ளார்; "ஒவ்வொரு மனிதனும் என்னைப்பற்றி நினைக்கும்படியாக, அவ்வளவு மகத்தானகாரியம் எதுவும் நான் செய்து

விடவில்லை. ஆனால் நான் உயிர்வாழ விரும்புவது; என் தலைமுறையில் நடைபெறும் நிகழ்ச்சியோடும், பொது மக்களுக்குப் புத்துணர்ச்சி தரும் செய்தியோடும் என் பெயரை இணைக்கவேயாகும்.''

மக்களாட்சி, என்பதற்கு, ''மக்களுக்காக, மக்களாலேயே நடத்தப்படும் மக்களின் அரசாங்கம்.'' என்று இலக்கணம் வகுத்து, செயற்படுத்திய கர்மவீரர் ஆப்ரஹாம்.

உள்நாட்டுப் போர் நின்று ஐந்தாவது நாளில், 1865, ஏப்ரல் 14-ம் நாள் இரவு, ஆப்ரஹாம் லிங்கன் தன் மனைவியோடு, **நமது அமெரிக்கப் பங்காளிகள்** என்ற நாடகம் பார்க்க நாடகசாலைக்குச் சென்றிருந்தார். தலைவருக்குரிய தனியிடத்திலிருந்து நாடகம் பார்த்துக்கொண்டிருக்கையில், திடீரென்று துப்பாக்கிக் குண்டுகள் அவர் தலையில் பாய்ந்தன! அடிமைத்தன்மையின் கொடுங்கோன்மையை ஒழித்த வீரன், அஞ்சாநெஞ்சன், மனித குலத்தை நேசித்த நல்லறிஞன், ஒரு கொடியோனால் சுட்டுக் கொல்லப்பட்டான்!

''தென்னாடுகள் பழி தீர்த்துக்கொண்டன'' என்று கத்தினான், ஜான் வில்க்ஸ் என்ற அமெரிக்கக் கோட்சே! ஆப்ரஹாம் லிங்கன் மடிந்தார். அவர் புகழ் மடியவில்லை. அமெரிக்கா அவரைச் சிலையாக்கி வாழ்த்துகிறது இன்றும். மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் கொடுமையை எதிர்த்துப்போராடும் வீரர்க்கு, அறிஞர், ஆப்ரஹாம் லிங்கன் ஓர் வழிகாட்டி. வெல்க அவர் குறிக்கோள்!

●●●●●

சிறுவர் அறிவுக் கதை உலகில் புகழ்பெற்ற மூன்று அரிய புத்தகங்கள்.

தோழியர் :
ப. க. குஞ்சிதம் எழுதியவை

★

வால்முளைத்த சாமியார்
இரண்டாம் பதிப்பு.
எரித்துவிடுவார், கல்லாக்கிவிடுவார் என்று புரளியைக் கிளப்பிவிட்டு, ஊரை ஏய்த்த வஞ்சகனின் கதை.
விலை 0—2—0

கெட்டிக்காரன்
இரண்டாம் பதிப்பு.
பள்ளி மாணவ, மாணவிகள், சிறுவர், சிறுமியர்க்குப் பகுத்தறிவூட்டும் மூன்று சிறு கதைகள்.
விலை 0—2—6

பைங்கிளி
அண்ணனின் செயலால் தந்தையின் கோபத்துக்கு ஆளாகி, அறிவின் துணையால் துன்பம் கடந்த சிறுமியின் கதை.
விலை 0—2—0

வியாபாரிகளுக்கு :
25% கழிவு தரப்படும்.

●

தென்றல் நூற்பதிப்புக் கழகம்
[illegible]

[முன் இதழ் தொடர்ச்சி]

அங்கு மிகச் சிறிய—கழுத்து போன்றவொரு நிலப்பகுதி, பெரிய நிலப் பாகத்தைத் தொடர்புபடுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தானாம்! நம்மிடத்திலே அடிக்கடி ''தந்திர வித்தைகளைக் காட்டும் 'சாத்தான்', கானல் நீர் போன்ற கண் கவர் காட்சி ஒன்றைக் காட்டினானாம்! ஆதாமி அந்தப் பெரும் நிலப்பகுதியைக் கண்டானாம்; அவன் உள்ளங் கவரும் வண்ணம், மலைகளும்—மலைச்சாரல்களும், பள்ளங்களும்—பள்ளத்தாக்குகளும், பனிப் பாறைகளும் மூடிய நெடுமலைகளும், வளைந்துவிழும் பெரிய நீர் வீழ்ச்சிகளும் அங்கே காணப்பட்டனவாம்! அவன் திரும்பிச் சென்று ஹேவாவிடம், ''அந்த நிலப்பகுதி நாம் வாழும் இதைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு சிறந்ததாகக் காணப்படுகிறது; ஆகவே நாம் அங்குக் குடியேறுவோம்'' என்று சொல்லினானாம்! அவள், எந்தக் காலத்துப் பெண்ணும் எப்பொழுதும் சொல்வதுபோல், ''நாம் இங்கு நன்றாகத்தான் வாழுகிறோம்; நமக்குத் தேவையானவற்றையெல்லாம் நாம் கொண்டிருக்கிறோம்; நாம் இங்கேயே வாழுவோம்'' என்று மொழிந்தாளாம்! ஆனால் அவன், ''இல்லை, நாம் போகத்தான் வேண்டும்'' என்றானாம்! எனவே, அவளும் உடன் செல்ல இசைந்தாளாம்! அவர்களிருவரும் அந்தக் கழுத்துப்போன்ற—சிறிய நிலப்பகுதிக்கு வந்ததும், அவன் அவளைத் தன் முதுகிலே தூக்கிக்கொண்டு அந்த நிலப்பகுதியைக் கடந்தானாம்! அவர்கள் பெரிய நிலப் பாகத்திற்கு வந்ததும், ஒரு பெரிய ஓசை கேட்டதாம்; என்னவென்று திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கழுத்துப்போன்ற—குறுகிய நிலப் பகுதி நொருங்கிக், கடலிலே அமிழ்ந்து மறைந்ததாம்! அது வரையில் அவர்கள் கண்டுவந்த கவர்ச்சிகரமான காட்சிகளும் உடனே மறைந்தனவாம்; வெறும் பாறைகளையும், மணலையும் தவிர வேறொன்றும் காணப்படவில்லையாம்! பிறகு பரம்பொருளான பிரம்மா, அவர்களிருவரும் ஆழ்ந்த நரகம் சேரவேண்டும் என்று சாபமிட்டாராம்!

பிறகு அவன் கூறினானாம்: ''என்னைச் சபி, அவளைச் சபிக்காதே; அது அவளுடைய குற்றம் அல்ல, அது என்னுடையதுதான்'' என்று. இந்த ஒரு செய்திக்காகவே நான் அவனை விரும்புகிறேன்!

அப்படிப்பட்ட மனிதனைக்

கொண்டுதான் உலகம் முதலில் தோன்றியது!

பரம்பொருளான பிரம்மா கூறினாராம், "நான் அவளைக் காப்பாற்றுவேன்; ஆனால் உன்னைக் காப்பாற்றமாட்டேன்" என்று! பின்னர், அவள் தன் காதலன்பு ததும்ப, இதயம் திறந்து கூறினளாம்—அந்தக் காதலன்பு, என்றென்றும் அவள் வழிவழி வரும் பெண்களுக்கெல்லாம் படிந்து காணப்படும் வகையில் கூறினளாம்: "அவனை நீர் விட்டுவைக்காவிடில், என்னை விட்டுவைக்க வேண்டாம்; அவனை விட்டுவிட்டு நான் வாழவிரும்பவில்லை; நான் காதலிக்கிறேன்" என்று! அதற்கு பிரம்மா, "நான் உங்களிருவரையும் வாழவிடுகிறேன்; ஆனால் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் என்றென்றும் கண்காணித்துக் கொண்டேயிருப்பேன்" என்று கூறினாராம்! அதற்காகவாவது அந்தப் 'பிரம்மாவை' நாம் விரும்பவேண்டியவனாகிறேன்!

அறிவுள்ள செயலுக்கு மதிப்பளிக்கப்படுகிறது!—இது சிறந்ததும், அழகு வாய்ந்ததுமான கதையல்லவா?...

அந்த நூலிலிருந்தே, அந்த நாட்டுக்குரிய மக்கள்—அதாவது நம்மால் துன்பப்படும் அஞ்ஞானிகள் என்று கருதப்படுபவர்கள்—நம்மால் மதம் மாற்ற முயலப்படும் அந்த அஞ்ஞானிகள், எப்படிப்பட்டக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன். நீண்ட தொலைவுக்கு அப்பாலுள்ள அஞ்ஞானிகளை, மத மாற்றுவதற்காக நாம் பாதிரிமார்களை அனுப்பிவைக்கிறோம்—இங்குள்ள அஞ்ஞானிகளைக் கொன்று குவிப்பதற்காகப் போர்வீரர்களை அனுப்புகிறோம்! அங்குள்ள புற சமயத்தாரை நம்மால் மதமாற்றமுடியுமாயின், ஏன் நமக்கு அருகிலுள்ளவர்களை மாற்ற முயலக்கூடாது? நமக்கு எளிமையிலுள்ளவர்களை மாற்ற ஏன் முயலக்கூடாது? முற்போக்கில் வரக்கூடிய வகையில், சராசரி அறிவு பெற்றிருப்பவர்களைத்தான் மாற்ற ஏன் முயலக்கூடாது? மதம்மாற்றவேண்டும் என்று முயன்றுகொண்டிருக்கிற உங்களுக்கு, இந்த நூலில் கூறப்பட்டிருப்பதைக் காட்டுகிறேன் கேளுங்கள்:

"ஆண் ஆண்மையின் அறிகுறி; பெண் அழகின் அறிகுறி! ஆண் வீரத்தின் அறிகுறி; பெண் காதலின் அறிகுறி! ஒரு ஆடவன் ஒரு பெண்ணைக் காதலிக்கும் போதும், ஒரு பெண் ஒரு ஆடவனைக் காதலிக்கும் போதும், அழகு தேவதைகள் சுவர்க்கத்தைவிட்டு நீங்கி, நில உலகை அடைந்து, அவர்கள் வீட்டிலே தங்கி, இன்பப் பாட்டுகள் இசைக்கும்" என்பதாகும்!

அப்படிப்பட்டவர்களைத் தான் நாம் மதம்மாற்றிக்கொண்டிருக்கிறோம் அதுபற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்!... இப்படிப்பட்டக் கருத்துக்களைப் படிக்கும்போது, காதலன்பு என்பது—ஒரு நாட்டிற்கு மட்டும் சொந்தமானதல்ல, பெருந்தன்மை என்பது—ஒரு இனத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல என்று புலப்படுவதை நீங்கள் உணரலாம். எல்லாக் காலங்களிலும், பெருமையும், அன்புள்ளமும் கொண்டவர்கள் மிகச் சிலராக ஆங்காங்கு தோன்றி, அன்பையும், இரக்கப் பண்பையும் மனிதசமுதாயத்தில் மலரச் செய்துள்ளார்கள். **(தொடரும்.)**

விதவை.

— டி. எஸ். லிங்கப்பா —

★

(1) அண்ணாஎன் உடன்பிறப்பே அந்தோ! உன்றன்
அருந்தங்கை கமலத்தின் முறையீட்டைக் கேள்.
கண்ணான என்கணவர் உயிர் துறக்கக்
கலங்கிநின்றேன் விதவை யெனும் வேடம்பூண்டேன்
மண்ணான குடமொன்றை உடைத்தல் போல்என்
வாழ்வுதனைச் சிதைத்துவிட்டார். கெட்டேன் அந்தோ!
பெண்ணான பிறவிகள் இவ் வையம்தன்னில்
பெற்றிடும் பேறிதுதானோ பகர்வீர் அண்ணா!

(2) பொட்டிட்டால் குற்றமென்றீர். தலையை வாரிப்
பூமுடித்தால் குற்றமென்றீர். விழியிலேமை
இட்டிடிலே குற்றமென்றீர். உளம்விரும்பும்
எழில்வளையல் அணிந்திடுதல் குற்றமென்றீர்.
பட்டாடை பூண்டிடுதல் குற்றமென்றீர்.
பலபேர்கள் முன்செல்லல் குற்றமென்றீர்.
கட்டான உடலினிலே இயற்கை தோன்றக்
'காதல்' எனும் ஆழியிலே வழுக்கிவீழ்ந்தேன்.

(3) குடம்தூக்கிச்சென்றேன் நான் குளத்தை நோக்கி.
குளித்திட்டேன், நீர் மொண்டேன், திரும்பிவந்தேன்.
இடைமறித்து "நில்"என்றான்; நின்றேன். நல்லான்
இன்மொழிகள் பல சொன்னான். மெய்மறந்தேன்
திடமான மனதோடு கரத்தைத் தொட்டான்.
தித்திக்கும் முத்தங்கள் தந்தான், பெற்றேன்.
இடைசேர்த்தான், அணைத்திட்டான், இன்பம் கண்டேன்,
இல்வாழ்வு பெறுவதுதான் குற்றம் ஆமோ?

கருத்துரை

அண்ணா யார்?

[ஆசிரியர்: வழிப்போக்கன். வெளியீட்டோர்: செல்வம் பதிப்பகம், 11, வெங்கலக்கடைத் தெரு, மதுரை.]

அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்களின் எழுத்துவன்மையும், பேச்சுத்திறனும் பற்றி, சுவைப்படச் சித்திரிக்கும் சிறு நூல். அண்ணா யார்? என்பது நாடறிந்த செய்தியெனினும், தொகுத்துக் காட்டும் இம்முயற்சி பாராட்டத்தக்கது. "நறுக்"கென்று தைக்கும் "வழிப்போக்கன்" நடை மிக நன்று. ஒன்பது திங்களில், இரண்டாம் பதிப்பு வெளி வந்திருப்பதிலிருந்து நூலின் மதிப்பு நன்கு விளங்கும்.

பக்கங்கள் 48. விலை 0—8—0

மனைவியைப் பற்றி.

[ஆக்கியவர்: க. கணபதி B A., B.L., வெளியீட்டோர்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்.]

"கதை" என்ற பெயரில், பயனற்ற குப்பைக் கூளங்கள் பெருகி வரும் இந்த வேளையில், இக்கதைத் தொகுப்பு வரவேற்கப்படவேண்டிய ஒரு நல்ல முயற்சி. மாப்பசான், பியர்லோட்டி, பாக்சாக், எமிலி ஜோலா ஆகிய நான்கு மேனாட்டு இலக்கிய மேதையரின், நான்கு சிறு கதைகளின் மொழி பெயர்ப்பும், வாழ்க்கைத் தத்துவத்தின் துணிகரமான படப்பிடிப்புகள். ஆசிரியரின் சிறு கதைகள் மூன்றும் இதில் இடம் பெற்றுள்ளன. நல்ல புத்தகம். அழகான பதிப்பு.

பக்கங்கள் 68. விலை 1—0—0

வழக்கில் சிக்கிய வனிதை.

[ஆசிரியர்: சி. எஸ். அறிவழகன். விற்பவர்: பரிமளப் பண்ணை, 17/420, ரங்கேகவுடர் வீதி, கோயம்புத்தூர்.]

விசித்திரமான செய்தியின்மேல் எழுந்த ஒரு விநோதமான கதை. பொழுதுபோக்காகப் படிக்கலாம்.

பக்கங்கள் 26. விலை 0—4—0

டார்ஜானும், புலிமனிதர்களும்.

[எழுதியது: கிருஷ்ணசாமி. விலை 0—2—0. குழந்தைப் பிரசுரம். 403, கடைவீதி, சேலம்.]

பிஞ்சு உள்ளத்தில் பீதியைக் கிளப்பும் ஒரு காட்டுக் கற்பனைக் கதை.

ஸ்கூல் மாட்ச்.

[எழுதியது: சுக்ரீவன் விலை 0-2-0 குமரன் பதிப்பகம், 7, பெத்துநாயக்கன் தெரு, சென்னை—1]

சிறுவர்களுக்கென்று எழுதப்பட்டுள்ள வெறும் கதை.

பகுத்துப்பார்.

பறைச்சியாவ தேதடா பனத்தியாவ தேதடா?
இறைச்சிதோ லெலும்பிலும் இலக்கமிட் டிருக்குதோ?
பறைச்சிபோகம் வேறதோ, பனத்திபோகம் வேறதோ?
பறைச்சியும் பனத்தியும் பகுத்துபாரும் உம்முளே.

—சிவவாக்கியர்.

பகுத்தறிவு.

அறிவியல் திங்கள் வெளியீடு.

★

கட்டண விவரம்.

உள் நாடு

ஆண்டுக்கு	2-4-0
தனி இதழ்	0-3-0

வெளி நாடு

ஆண்டுக்கு	3-0-0
தனி இதழ்	0-4-0

தமிழ் மாதந்தோறும் முதல் நாளிலே வெளிவரும்.

1. கட்டணத் தொகையை முன்பணமாகப் பணவிடை செய்ய வேண்டும்.
2. சிலோன் நேயர்கள் மட்டும் விலைகொள் அஞ்சலில் பெறலாம்.
3. கையொப்பதாரர் தெளிவான முகவரி கொடுத்தல் வேண்டும்.
4. தொகை செலுத்திய மாதம் முதலாக இதழ்கள் அனுப்பப்பெறும்.

இல்லாத இடங்களுக்கு விற்பனையாளர் தேவை.

●

பகுத்தறிவு அலுவலகம்,
சகைண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

"பகுத்தறிவு"த் தொகுப்பு.

தை முதல், ஆனி முடிய ஆறு இதழ்களையும் சேர்த்துத் தொகுத்தது.

அழகான பைண்டு!

அறிவுக்குணவான கட்டுரைகள், கதைகள், கவிதைகள், பொன்மொழிகள், தொடர் கட்டுரை, அறிஞர் வரலாறுகள் நிறைந்த அறிவுக் கருவூலம்.

விலை ரூபா 1-0-0

சொற்பப் பிரதிகளே உள்ளன. முந்தினவர்க்கே கிடைக்கும்.

★

பகுத்தறிவு அலுவலகம்,
சகைண்டபுரம் :: சேலம் மாவட்டம்.

"பகுத்தறிவு" விற்பனையாளர்.

யாழ்ப்பாணத்தில்:
கோ. இராமசாமி,
தமிழ்ப் பண்ணை, யாழ்ப்பாணம்.

பட்டிக்காலாவில்:
பாபு நியூஸ் மார்ட்,
15, பஜார் வீதி,
பட்டிக்காலா. (BATTICALOA)

பம்பாயில்: செல்வபுவன்,
ஜெனரல் ஸ்டோர்ஸ், 20, ஆகாச வாடி, தாராவி, பம்பாய்—17.

சிங்கப்பூரில்:
எஸ். முத்துசாமி,
509, ஹாவ்லக் ரோட், சிங்கப்பூர்.

அங்குரான் கெட்டாவில்:
சு. ஆறுமுகநாதன்,
52, சாரதன் & CO.,
அங்குரான் கெட்டா.

சென்னையில்:
K. வாசுதேவன்,
7, பட்டாபிராமய்யர் தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை 1.

JUL 5721.

Regd. No. M. 5721. PAHUTHARIVU.

நவரச நாடக

பெட்டகம்.

●

கலைச்சுவை வாய்ந்த

கருத்தோவியம்.

●

படித்துச் செல்லும்பொழுதே காட்சிகள் சினிமாப் படமாக நம் முன் தோன்றுகின்றன. நறுக்குத் தெறித்தாற்போல் அமைந்துள்ள வசனங்கள் நாடகத்திற்குச் சுவையூட்டுகின்றன. கடைசி வரையிலும் பாத்திரங்களின் குண இயல்புகள் கெட்டுப்போகாதவண்ணம் காத்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மற்றொன்று;— குறுகிய காலத்திற்குள்ளாகவே இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருக்கிறது "ஒரே முத்தம்." தென்றல் நூற்பதிப்புக்கழகத்தார் 'கண்ணைக்கவரும்' முறையில் இவ்விரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார்கள். —[illegible]

விலை 1-4-0

வியாபாரிகட்கு 25% கழிவு.

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.

Edited, Printed & Published by, P. KANNAN, at Santhamizh Printing Works, Jalakandapuram. Salem. Dt. (S. India).